உள்ளடக்க அட்டவணை

பக்க இல.

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (சி.ஐ.டி.ஏ)

1.0 நிறைவேற்றுப் பொழிப்பு 1

1.1 அறிமுகம்..... 1

1.2 தூரநோக்கு, இலட்சியநோக்கு மற்றும் குறிக்கோள்கள் 1

1.3 பிரதான தொழிற்பாடுகள் 2

1.4 அமைப்பு வரைபடம் 5

1.5 சி.ஐ.டி.ஏ. இன் பிரதான பிரிவுகள் 4

1.6 நிறுவனங்கள்/திணைக்களத்தின் கீழுள்ள நிதியங்கள்..... 4

2.0 செயல்முன்னேற்ற மற்றம் எதிர்கால கண்ணோட்டம்..... 5

- கைத்தொழில் சேவைகள் பிரிவு 5
- அபிவிருத்திப் பிரிவு 10
- மின்னியல் இயந்திர சேவைகள் பிரிவு 15
  - மின்சார உபகரண செயற்படுத்துனர் பயிற்சிப் பிரிவு 15
  - நிர்மாண உபகரண பராமரிப்பு பயிற்சிப் பிரிவு..... 19
- கைத்தொழில் பயிற்சிப் பிரிவு 24
  வீடமைப்புத் திட்டமிடல் மற்றும் கட்டிடவாக்க நிலையம் 26
- மனித வள மற்றும் நிர்வாகப் பிரிவு..... 29

3.0 ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றல் 33

4.0 செயலாற்றல் குறிகாட்டிகள் 71

5.0 மனித வளக் கோவை..... 72

6.0 இணங்கியொழுகுதல் அறிக்கை..... 76

நிர்மணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (சி.ஐ.டி.ஏ)

1.0 நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD) இற்குப் பதிலாக 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதிகாரசபை (சி.ஐ.டி.ஏ) ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

1.2 தூரநோக்கு, இலட்சியநோக்கு மற்றும் குறிக்கோள்கள்

தூரநோக்கு

"சர்வதேச நியமங்களுக்கு அமைவாக இலங்கையில் நம்பகமான மற்றும் திறமையான நிர்மாணக் கைத்தொழிலை உருவாக்குதல்"

இலட்சியநோக்கு

"ஒரு தேசிய நிர்மாண கொள்கை அடிப்படையில் தொழில்முறையான சேவைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் கட்டுப்பாடுகள், திறன் விருத்தி, அபிவிருத்தி மற்றும் தர உத்தரவாதம் என்பவற்றினூடாக உள்ளூர் மற்றும் உலகளாவிய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நிலையான தேசிய அபிவிருத்திக்காக நிர்மாணக் கைத்தொழில் துறைக்கு தந்துரோபாய தலைமைத்துவத்தை வழங்குதல்."

குறிக்கோள்கள்

2014 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் "நீண்ட தலைப்பு" நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் ஒட்டுமொத்த குறிக்கோள்களையும் நோக்கங்களையும் பின்வருமாறு பிரதிபலிக்கிறன :-

"இலங்கையில் நிர்மாணக் கைத்தொழில் வளர்ச்சியை நேக்காகக் கொண்டு பதிவு நடவடிக்கைகள் மற்றும் நிர்மாணக் கைத்தொழில் நடவடிக்கைகள் என்பவற்றை தரப்படுத்தி ஒழுங்குபடுத்துவதன் மூலம் நிர்மாண வேலைகளுக்கான தேசிய ஆலோசனைக் குழுவை நிறுவுவதற்கும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியம் என்பவற்றை நிறுவுவதற்கும் தொழில் சார் நிபுணர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், ஒப்பந்ததாரர்கள், மற்றும் கைவினைஞர்களின் முன்னேற்றம் மற்றும் நன்மைக்காக நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பான பிணக்குகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கும் இலங்கையில் நிர்மாணக் கைத்தொழில், பொதுமக்கள் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அதற்கு இடைநேர் விளைவான விடயங்கள் மற்றும் நிகழ்வுகளுக்காக இயற்றப்பட்ட ஒரு சட்டமாகும்"

1.3 பிரதான தொழிற்பாடுகள்

- கௌரவ அமைச்சரினால் வழங்கப்பட்ட வழிகாட்டலுக்கு அமைய நிர்மாண தேசிய கொள்கையை செயல்படுத்துவதை உறுதிப்படுத்தல்.

- நிர்மாணக் கைத்தொழில் துறையில் நிலைபேறான வளர்ச்சி, சீர்திருத்தம் மற்றும் மேம்பாட்டை சாதிப்பதில் நிர்மாணக் கைத்தொழில் பங்குதாரர்களுக்கு மூலோபாயத் தலைமைத்துவத்தை வழங்குதல்.

- அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் நிர்மாணக் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்டவர்களின் பதிவை புதுப்பித்தல் மற்றும் பதிவு செய்தல்.

- ஆற்றல் மிக்க கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்வதற்கு சிறப்புக் கவனம் செலுத்தி நிர்மாணக் கைத்தொழிலின் நிலையான வளர்ச்சியை ஊக்குவித்தல்.

- நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அதன் வளர்ச்சிக்கு எந்த விடயங்களில் ஆராய்ச்சி, பிரச்சாரம், ஆய்வுப் பணிகள் மற்றும் வெளியீடுகள் தேவைப்படுகின்றனவோ அவற்றை ஊக்குவித்தல்.

- நிர்மாணக் கைத்தொழிலில் ஆலோசகர்களின் உயர்தொழிலுக்குரிய தரத்தை மேம்படுத்தல். நிர்மாணக் கைத்தொழிலில் உயர் தொழில்சார் அமைப்புக்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள வேறு பிற அமைப்புக்களுக்கு உதவுதல்;


- நிர்மாணக் கைத்தொழில் தொடர்பாக அதிகாரசபையினால் இயற்றியுள்ள நடவடிக்கை முறைகள், விதிகள், செயல்முறைகள் மற்றும் கட்டளைகள் என்பவற்றை செயல்படுத்தல்.

சட்டத்தின் மூலம் விதந்துரைக்கப்பட்டுள்ள சகல தொழிற்பாடுகளும் உரிய கால எல்லைக்குள் செயற்படுத்தப்படுவதனை உறுதிசெய்வதற்காக அவை அனைத்தையும் உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டம் தயார் செய்யப்பட்டது. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கை, நிர்மாண கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம் மற்றும் 2015 - 2019 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் என்பவற்றுக்கு அமைவாக 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கால இலக்குகளுடன் இணைந்த 2019 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கைகள் மற்றும் ஒவ்வொரு செயற்பாட்டிலுமிருந்து எதிர்பாக்கப்பட்ட வருமானம் மற்றும் அடையப் பெற்றுள்ள செயல் முன்னேற்றம் என்பன அந்தந்தப் பிரிவுகளின் கீழ் விரிவாக தரப்பட்டுள்ளன.

1

1.4 அமைப்பு வரைபடம்



1.5 CIDA இன் பிரதான பிரிவுகள்

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) தனது தொழிற்பாடுகளை நான்கு தொழிற்பாட்டுப் பிரிவுகளின் ஊடாக மேற்கொள்கின்றது. பின்வருமாறு ஒவ்வொரு பிரிவும் ஒரு பணிப்பாளரின் தலைமையின் கீழ் இயங்குகின்றது:

அ. கைததொழில் சேவைகள் பிரிவு
ஆ. அபிவிருத்திப் பிரிவு
இ. மின் எந்திரவியல் சேவைகள் பிரிவு
ஈ. கைத்தொழில் பயிற்சிப் பிரிவு

1.6 அதிகாரசபையின் கீழுள்ள நிதியங்கள் / நிறுவனங்கள்

1. நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபை நிதியம் - உள்வாரி நிதியம்
2. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி நிதியம் - ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.

2.0 செயல்முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

கைத்தொழில் சேவைகள் பிரிவு

செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் தொடர்பில் ஆலோசனை வழங்கும் நியமங்கள், விவரக்குறிப்புகள் மற்றும் வழிகாட்டுதல்களை அமைத்தல், தேவைக்கேற்ப தீர்ப்பளிப்பாளர்களை நியமித்தல், தகுதி வாய்ந்த நபர்களை பதிவு செய்தல், தர முகாமைத்துவ கணக்காய்வாளர்கள், நடுவர்கள் மற்றும் அடையாளம் காணப்பட்ட நிர்மாண பணிகள் ஆகியவற்றின் மூலம் நிர்மாணத் துறையை ஒழுங்குபடுத்துவதற்கான தேவையை அடையாளம் காணல், தொழில்நுட்ப கணக்காய்வு, மத்தியஸ்தம், ஆர்வமுள்ள தரப்பினர்களின் திறன்களை உருவாக்குதல், ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல் மற்றும் நிர்மாணத் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான வேறு ஏதேனும் செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக கைத்தொழில் சேவைகள் பிரிவு உருவாக்கப்பட்டது.

கைத்தொழில் சேவைகள் பிரிவு, 2019 ஆண்டில் பின்வரும் விடயப்பரப்புக்களிலுள்ள கைத்தொழிற்துறையின் சேவைநாடுனர்களிற்கு அதன் சேவைகளை வழங்கியது. (அதாவது ஆலோசகர்கள், ஒப்பந்ததாரர்கள், கொள்கை வகுப்பாளர்கள், முதலீட்டாளர்கள், போன்றோர்)

- அறிவுரைகள், ஆலோசனை சேவைகள், பிணக்குத் தீர்மானம் மற்றும் ஒப்பந்த விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்கும் தீர்ப்பாளர்களை நியமித்தல்.
- கருத்திட்ட முகாமைத்துவ சேவைகள் வழங்குதல்.
- நிர்மாணப் புள்ளிவிபரங்களின் விவரத்திரட்டினை மாதாந்தம் வெளியிடுதல்
- CIDA வழிகாட்டல் கோவைகள் மற்றும் வகையீடுகளை வெளியிடுதல்
- தரமான விலைமனு ஆவணங்களை வெளியிடுதல்.
- நிர்மாணக் கைத்தொழில் தொடர்பான தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்துதல்.
- மாவட்ட மட்டத்தில் உத்தியோகத்தர்களை நியமித்தல்.
- தொழில்நுட்ப கணக்காய்வு நடைமுறையை நிறுவுதல் மற்றும் தரமான முகாமைத்துவ கணக்காய்வாளர்களுக்கு தேவையான தகைமைகளை தயாரித்தல்.
- தகைமையுள்ள ஆட்களைப் பதிவு செய்தல்.
- மத்தியஸ்தரகளுக்கான நடைமுறை விதிகளை தயாரித்தல் (வரைவு)
- சூழல் மற்றும் பொது மக்கள் சுகாதாரம் தொடர்பான விதிகள் மற்றும் கட்டளைகளை தயாரித்தல் (வரைவு)
- ஒழுக்க மற்றும் சமூகப் பெறுமானங்கள் தொடர்பான விதிகள் மற்றும் கட்டளைகளை தயாரித்தல் (வரைவு)

❖ **ஆலோசனை சேவைகள், பிணக்குகளைத் தீர்த்துவைத்தல், மத்தியஸ்தம் வகித்தல் மற்றும் நிர்மாண ஒப்பந்த விடயங்களில் தீர்ப்பாளர்களை நியமித்தல்**

கூறுவிலை ஆவணங்களைத் தயாரித்தல், ஒப்பந்த நிருவாகம், தகராறுகளை தீர்த்துவைத்தல், விலை ஏற்றத்தாழ்வுகளிற்கான CIDA சூத்திரமுறை, CIDA நியம கூறுவிலை ஆவணங்கள், தொழில்நுட்ப நியமங்கள், தொழில்நுட்ப விபரக்குறிப்புகள் மற்றும் வழிகாட்டல்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய ஆலோசனைச் சேவைகளை இப்பிரிவு வழங்குகின்றது.

மேற்கூறிய விடயப்பரப்புகள் தொடர்பில் ஒப்பந்த சிக்கல்களை எதிர்கொண்ட ஏராளமான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து வாய்மொழி மற்றும் எழுதப்பட்ட ஆலோசனை சேவைகள் கோரப்பட்டன. மேலே குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பாக 2050 ஆலோசனை சேவைகள் 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

ஒப்பந்தத் தரப்பினரின் வேண்டுகோளின் பேரில் 2019 ஆம் ஆண்டில் 22 தீர்ப்பாயர்கள் நியமிக்கப்பட்டனர்.

2019 ஆம் ஆண்டில் பின்வரும் மத்தியஸ்தங்கள் நடத்தப்பட்டன.

- ரிக்கோட்டா ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் - கொழும்பு தெற்கு போதனா மருத்துவமனை, கலுபோவில

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் ஒப்பந்தக்காரர்களுக்கான அலுவலகம் மற்றும் களஞ்சியக் கட்டிடம் - கலுபோவில. (ஒப்பந்தத்தை முடிவுறுத்தல்)

- சிங்ஹ ருவான் நிர்மாணம் - பிரதேச செயலகம், காலி.
  பத்தேகம பிரதேச சபையில் மூன்று மாடி கட்டிடத்தின் நிர்மாணம்

- செயலாளர், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சு – வாசிரி கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்

  மகாவேலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சால் நியாயமற்ற முறையில் ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்திருந்தமை குறித்த புகார்

- கிருஷனி கன்ஸ்ட்ரக்ஷன் - பிரதேச செயலகம் - அக்மீமனா
  புதிய கட்டிடத்தைச் சுற்றி நடைபாதைத் தொகுதிகள் அமைத்தல் - அக்மீமன பிரதேச செயலகம்

- தர்மதாச கன்ஸ்ட்ரக்ஷன் என்ட் மற்றும் என்டர்பிரைசஸ் - மத்திய கலாச்சார நிதியம் பொலன்னறுவை புனித நகரத்தில் இன்டர்லாக் பேவிங் ஒப்பந்தத்திலுள்ள சிக்கல்கள்

- நீர்கொழும்பு மாநகர சபை- சுமனசேகர கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்

  நீர்கொழும்பு நகர சபையில் பொது நூலகம் மற்றும் பொருளாதார வசதிகளுடன் இரண்டு மாடி கட்டிடம் கட்டுதல்

- வி.வி.ராமநாதன் என்ட் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் - கட்டிடத் திணைக்களம், வடக்கு மாகாணம், கட்டிடத்தை கையகப்படுத்துவதற்கு மத்தியஸ்தம் கோருதல்.

- கே.எஸ். டிரேடிங் (பிரைவேட்) லிமிடெட். - இன்டிபென்டன்ட் டெலிவிஷன் நெட்வொர்க் லிமிடெட்,

  சுயாதீன தொலைக்காட்சி நெட்வொர்க் லிமிடெட் ஸ்டுடியோ வளாகம் மற்றும் அலுவலக வளாகங்களுக்கான நான்கு மாடி கட்டிடத்தின் கட்டுமான திட்டத்திற்கான காற்றுச் சீராக்கி மற்றும் காற்றோட்ட முறைமையினை வழங்கி நிறுவுதல் மற்றும் பரிசோதனை செய்து ஆரம்பித்தல் விக்ரமசிங்கபுர, பத்தரமுல்ல.

- விஜயா என்ஜினீயரிங் - கிரியுல்ல பல்நோக்கு கூட்டுறவு சங்க லிமிடெட்
  எரிபொருள் நிரப்புதல் நிலையத்தின் கட்டுமானம் (கட்டம் 1) கிரியுல்ல பல்நோக்கு கூட்டுறவு சங்க லிமிடெட்

- மனம்பேரி இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட் - லங்கா மினரல் சாண்ட் லிமிடெட்,
  லங்கா மினரல் சாண்ட் லிமிடெட் நிறுவனத்திற்கான முன்மொழியப்பட்ட ஆறு மாடி அலுவலக கட்டிட நிர்மாணம்

- தர்மதாச கன்ஸ்ட்ரக்ஷன் என்ட் மற்றும் என்டர்பிரைசஸ் - விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடட்.
  மத்தல சர்வதேச விமான நிலையத்தில் பணியாளர் விடுதிகளை நிர்மாணித்தல் - அம்பாந்தோட்டை

2016 ஆம் ஆண்டு தொடக்கம் தீர்ப்பாளர்களின் பெயர் பட்டியல் CIDA இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் படி, தீர்ப்பாளர்கள் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். இது தொடர்பில் 2019 இல் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு 29 தீர்ப்பாளர்கள் அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்டனர்.

❖ **செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல்**

அரசாங்க நிறுவனங்கள் தம்மிடம் தொழில்நுட்ப ஆளணி இல்லாத போது அவர்களது கட்டிட நிர்மாணப் பணிகளுக்கான செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை இந்தப் பிரிவிடம் கோருகின்றனர். நாம் அரசாங்க நிறுவனங்களிற்கு இந்தச் சேவைகளை வழங்குகின்ற அதேவேளை செயற்திட்ட முகாமைத்துவம் தொடர்பில் எமது ஊழியர்களின் ஆற்றலும் இதன்மூலம் கட்டியெழுப்பப் படுகின்றது. அதற்கமைய பெறுகை நடைமுறை, கூறுவிலை ஆவணங்களைத் தயாரித்தல், ஒப்பந்ததாரர்களையும் ஆலோசகர்களையும் தெரிவு செய்தல், கூறுவிலைகளை மதிப்பீடு செய்தல், ஒப்பந்த நிருவாகம், கொடுப்பனவு சான்றிதழ்களை தயாரித்தல் போன்ற விடயங்களுக்கான அறிவுரைகள் என்பன இச்சேவைகளில் உள்ளடங்குகின்றன.

2019 ஆம் ஆண்டில் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் வழங்கப்பட்ட பிரதான நிறுவனங்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

- தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை
  - ஏலமிடல் மண்டபத்தை புதுப்பித்தல்
- இலங்கை தேயிலை சபை
  - அவசரநிலைக்கான சேர்த்தல்கள் மற்றும் திருத்தங்கள் - ஆய்வுகூட கட்டிடத்தின் தீ அபாய வெளியேறல்

❖ **நிர்மாணப் புள்ளி விபரங்களின் CIDA மாதாந்த விவரத்திரட்டினை வெளியிடுதல்**

இவ்விபரத் திரட்டுக்காக பொருட்களின் விலைகள், ஊழியர் கூலிகள், பொறிகளின் வாடகைக் கட்டணங்கள் ஆகியன சேகரிக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு பகுப்பாயப்பட்டன. இந்த விபரத் திரட்டுக்கள் முக்கியமாக ஒப்பந்தக் கருத்திட்டங்களில் உள்ளீடுகளின் விலை ஏற்ற இறக்கங்களைக் கணக்கிடுவதற்கான சுட்டிகளாகப் பயன்படுத்துகின்றன. இந்த வருடத்தில் நிர்மாணத்துறை செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு சுமார் 1584 எண்ணிக்கையிலான விவரத்திரட்டுகள் விற்பனை செய்யப்பட்டன.

விபரத் திரட்டினை வெளியிடும் செயல்முறையை மீளாய்வு செய்வதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் பின்வரும் நிறுவனங்களை உள்ளடக்கிய ஒரு குழு நிறுவப்பட்டது.

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபை
2. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை
3. இலங்கையின் முக்கிய நிர்மாணிப்பாளர்கள்
4. இளம் நிர்மாணப்பாளர் மன்றம்
5. கட்டிடங்கள் திணைக்களம்
6. நீர்ப்பாசனத் திணைக்களம்
7. அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்

❖ **சிஐடிஏ நியமங்கள், விவரக்குறிப்புகள் மற்றும் வழிகாட்டுதல்கள்**

2019 இல் வெளியிடப்பட்ட ஆவணங்கள் வருமாறு;

- CIDA / STD / 03 – நிர்மாண பசுமை வழிகாட்டி
  - கட்டிட செயற்திட்டங்களின் நிர்மாண கட்டங்களுக்கான சுற்றுச்சூழல் வழிகாட்டி
- ID CIDA / STD / 04 – நிர்மடாணத்தின் போதான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு
  - நிர்மாணத்தின் போதான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கான நியமம்

நியம கேள்விகோரல் ஆவணங்களை வெளியிடுதல்.

பின்வரும் மூன்று நியம கேள்விகோரல் ஆவணங்கள் திருத்தப்பட்டு வரப்பட்டிருந்தன.

• எஸ்.பி.டி சிறிய மற்றும் நடுத்தர ஒப்பந்தங்கள்

எஸ்.பி.டி பிரதான ஒப்பந்தங்கள் மற்றும் எஸ்.பி.டி 4 - வடிவமைப்பு மற்றும் உருவாக்க ஒப்பந்தங்களின் வரைவு பொதுமக்களின் கருத்துக்களுக்காக அனுப்பப்பட்டது.

நிர்மாணக் கைத்தொழில் தொடர்பான தலைப்புகளில் கருத்தரங்குகளை நடத்துதல்

தொழிற்துறையின் திறன் மேம்பாட்டு தேவைகளை இனங்கண்டு பின்வரும் தலைப்புகளில் இந்த பிரிவு 5 கருத்தரங்குகளை நடத்தியது.

தலைமை அலுவலகம் -:

- ஒப்பந்தப் பணிகளுக்கான விலைவேறுபாட்டு அறிக்கை தயாரித்தல்
- கட்டமைப்பு வலுவூட்டப்பட்ட கான்கிரீட்
- தீர்ப்பாளர் அனுபவங்கள்
- நிர்மாண விலை ஏற்றத் தாழ்வுகள்
- நிர்மாண ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள் பிரதான அம்சங்கள்

மாவட்ட ரீதியான நிகழ்ச்சிகள் -:

i. அளவீட்டுக்கான நியம முறை எஸ்.எல்.எஸ். 573 – 2019 ஜனவரி 19 மற்றும் 20 காலியில். ஒப்பந்தப் பணிகளுக்கான விலைவேறுபாட்டு அறிக்கையைத் தயாரித்தல் - 2019 ஜனவரி 22 கொழும்பில், கேள்விகோரல் மற்றும் மதிப்பீடு – 2019 ஜனவரி 26 மற்றும் 27 அனுராதபுரத்தில், ஒப்பந்த நிர்வாகத்தில் முக்கிய ஆவணங்கள் - 2019 ஜனவரி 29 கம்பஹாவில்.

ii. கட்டமைப்பு வலுவூட்டப்பட்ட கான்கிரீட் - 2019 பெப்ரவரி 14, கொழும்பில், ஒப்பந்த நிர்வாகத்தில் முக்கியமான ஆவணங்கள் - 2019 பெப்ரவரி 23 குருநாகலில், தீர்ப்பாளர் அனுபவங்கள் - 2019 பெப்ரவரி 07 கொழும்பில், கேள்விகோரல் மற்றும் மதிப்பீடு – 2019 பெப்ரவரி 14 மற்றும் 15 மட்டக்களப்பில்.

iii. ஒப்பந்த நிர்வாகம் SBD 03 – 2019 மார்ச் 23 மற்றும் 24 யாழ்ப்பாணத்தில், கேள்விகோரல் மற்றும் மதிப்பீடு - 2019 மார்ச் 28 மற்றும் 29, மட்டக்களப்பில், நிர்மாண நேர முகாமைத்துவம் - 2019 மார்ச் 30 களுத்துறையில், கட்டிட சேவைகள் பொறியியல் (MEP) - 2019 மார்ச் 30 மற்றும் 31 அம்பாறையில்.

iv. சிடா, எஸ்.பி.டி ஆவணங்களின் அடிப்படையில் கால நீடிப்பு கோரல் மற்றும் கொடுப்பனவு சிக்கல்கள் - 2019 மே 25 மாத்தறையில்.

v. விலை ஏற்றத் தாழ்வுச் சூத்திரம் - 2019 ஜூன் 15 மாத்தளையில், கேள்வி ஆவணங்களை தயாரித்தல் மற்றும் கேள்விகளை மதிப்பீடு செய்தல் - 2019 ஜூன் 22 கோகாலையில், விலை ஏற்றத் தாழ்வுச் சூத்திரம் - கொழும்பு.

vi. சிடா ஆவணங்களின் அடிப்படையில் கால நீடிப்பு கோரல் மற்றும் கொடுப்பனவு சிக்கல்கள் - 2019 ஜூலை 21 அனுராதபுரவில்

vii. கட்டுமானத்தில் நியம கேள்விகோரல் ஆவணங்கள் மற்றும் காசுப் பாய்ச்சல் முகாமைத்துவம் - 2018 ஆகஸ்ட் 18 குருநாகலில், 2018 செப்டம்பர் 15 களுத்துறையில்.

viii. கட்டுமானத்தில் ஒப்பந்த நிர்வாகத்தில் முக்கிய எதிர்காலங்கள் - 1 ஆகஸ்ட் 2019 கொழும்பில், கட்டுமானத்தில் கொள்முதல் செய்வதற்கான முக்கிய அம்சம் - 27 ஆகஸ்ட் 2019 திருகோணமலையில்

ix. நிர்வகித்தல், குறைத்தல், நீக்குதல், தாமதங்கள், தகராறுகள், சிக்கல்கள், கோரல்கள், ஊழல் உட்பிரிவுகள், சட்டவிரோத உட்பிரிவுகள், அரசு மற்றும் தனியார் துறை ஒப்பந்தங்களில் சாத்தியமற்ற விவரக்குறிப்புகள் - 2019 செப்டம்பர் 03 காலியில்

x. பசுமை மூலப்பொருள் - 2019 அக்டோபர் 1 ஆம் திகதி களுத்துறை டி.சி.ஓ., மின் பொருத்தல்களின் வடிவமைப்பு – 2019 அக்டோபர் 12 மற்றும் 13 அம்பாறை, 2019 அக்டோபர் 26 முல்லைதீவு மற்றும் புத்தளத், 24 ஆந் திகதி கம்பஹா, மாத்தறை.

❖ தொழில்நுட்ப கணக்காய்வு

தர முகாமைத்துவ கணக்காய்வாளர்களை பதிவுசெய்தல் மற்றும் தர முகாமைத்துவ கணக்காய்வாளர்களின் பதிவேட்டை பராமரிப்பதற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் தொழில்நுட்ப கணக்காய்வை மேற்கொள்வதற்கான நடைமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

பிரிவு ஒரு தொழில்நுட்ப கணக்காய்வை மேற்கொண்டது.

- **பாலபிட்டிய பிரதேச சபை**

❖ தகுதி வாய்ந்த நபர்களை பதிவுசெய்தல்

பதிவுசெய்யப்பட்ட தகுதி வாய்ந்த நபர்களுக்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள், தகுதிவாய்ந்த நபர்களால் பயன்படுத்தப்பட வேண்டிய விசாரணை மற்றும் ஆவணங்கள் வெளியிடப்பட்டு பதிவுசெய்தல் செயல்பாட்டில் உள்ளது.

❖ தீர்ப்பிற்கான நடைமுறைகளை நிறுவுதல்

பதிவுசெய்யப்பட்ட தீர்ப்பாயருக்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் தீர்ப்பிற்கான நடைமுறை ஆகியவை வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

❖ தீர்ப்பாளர்களிற்கான டிப்ளோமா பாடநெறி

தீர்ப்பாளர்கள் குறித்த டிப்ளோமா பாடநெறி 2019 ஆம் ஆண்டில் நிறைவடைந்ததுடன் 15 தீர்ப்பாளர்கள் தேர்வில் சித்தியடைந்தனர்.

1. நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கான தேசிய பதிவு மற்றும் தரப்படுத்தல் திட்டம்

ஏதேனும் குறித்துரைத்த ஒப்பந்தத்திற்கு தொடர்பு இன்றி கருத்திட்டங்களின் வேறு விதமான வகைகளையும் அளவுகளையும் பொறுப்பேற்பதற்கான அவர்களது பொதுவான தகுதியை நிர்ணயிப்பதற்காக உத்தேசமான ஒப்பந்தக்காரர்களின் ஆற்றல்களுக்கான ஒரு அளவீட்டு நடைமுறையாகவே பதிவும் தரப்படுத்தலும் விளங்குகின்றன. ஒப்பந்தக்காரரின் தொழில்நுட்ப மற்றும் நிதிசார் நிலையைப் பரிசீலிப்பதன் மூலம் பதிவும் தரப்படுத்தலும் நிர்ணயிக்கப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டில் 991 எண்ணிக்கையிலான புதிய பதிவுகள் வழங்கப்பட்டு, 438 ஒப்பந்தக்காரர்கள் தரமுயர்த்தப்பட்டதுடன் 798 ஒப்பந்தக்காரர்களது பதிவுகள் புதுப்பிக்கப்பட்டன.

2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் படி, பின்வரும் ஒழுங்குவிதிகள் 2116/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 2019.03.28 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்டன.

ஒழுங்குவிதிகள்
55(2) ஆம் பிரிவு – நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையால் தாபிக்கப்பட்ட தகவல் செயலகத்தின் தொழிற்பாடுகள்

(*) இணையத்தளம் ஊடான ஒப்பந்தக்காரர்கள் பதிவுகள் கண்காணிப்பு முறைமை (CCPMS) மற்றும் தேசிய நிர்மாணக் கைத்தொழில் தகவல் முறைமை (NCIIS)

CCPMS

இந்த நிகழ்நிலை கண்காணிப்பு முறைமையின் மூலம் ஒப்பந்தக்காரர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் ஆலோசகர்களின் முக்கிய பங்கேற்றல் பெறப்பட்டது. இருப்பினும், ஆலோசகர்களின் ஆர்வம் இல்லாமையால் இந்த முறைமை குறைந்த வேகத்தில் இயங்குகின்றது.

NCIIS

என்.சி.ஐ.எஸ் என்பது இலங்கையின் நிர்மாணத் துறையின் செயற்பாட்டு முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் அறிக்கையிடவும் உருவாக்கப்பட்ட வலையமைப்பு ஆகும். ஒப்பந்தக்காரர் பதிவு, நிர்மாணத் தொழில் விதிமுறைகள், நிர்மாணம் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் எந்தவொரு தனிநபரின் பயன்பாட்டிற்கான மேம்பாடு ஆகியவற்றின் தேசிய தரவுகள் இதில் உள்ளடங்கியுள்ளன. மேலும், இது சர்வதேச தரவுகளை அணுகுவதற்கான நம்பகமான ஆதாரமாக செயல்படுகின்றது. தொழில்துறையில் பங்களிக்கும் காரணிகளின் ஏற்ற இறக்கங்கள், அரசாங்க சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் செயல்திறன் போன்ற கிடைக்கக்கூடிய உண்மைத் தரவுகளிற்கமைய இது தொடர்ந்து அபிவிருத்தி செய்யப்படும்.

வலைப்பின்னலின் மேம்பாட்டுப் பணிகள் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிறைவடைந்துள்ளதுடன் தேவையான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு, அதிகாரசபை சட்டத்தின்படி சட்டப்பூர்வ ஆதரவை பெற்றுக்கொள்ளும் பொருட்டு அவை வெளியிடப்பட உள்ளன.

இலங்கையில் அதிக உற்பத்தித்திறன் மற்றும் பயனுள்ள தொழிற்துறையை எளிதாக்கும் வகையில் உலகளாவிய நிர்மாண சமூகத்திற்கு ஒரு தேசிய சேவையாக தரவு சேகரிக்கும் இப்பொறிமுறையை விரைவில் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது

நிர்மாணத்துறை சிறப்புத் திறமைக்கான CIDA விருதுகள்

நிர்மாணத்துறையில் உயர்தொழில்சார் பண்பினையும் திறமையையும் மேம்படுத்தும் நோக்கில் 1990 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட வருடாந்த விருது வழங்கும் திட்டம் 30 ஆவது முறையாகவும் 2019 இல் நடாத்தப்பட்டது. நிர்மாண முகாமைத்துவத்தில் முதன்மையான செயலாற்றல், தொழில்நுட்ப நிபுணத்துவம், தரம், உயர்தொழில் தன்மையின் உயர் மட்டம், புத்தாக்கத்திறனுக்குரிய பொருத்தமான தொழில்நுட்பத்தின் அறிமுகம், பயிற்சியில் கைவினைஞர்களின் பங்கெடுப்பு ஆகியவற்றை இவ் வெகுமதித் திட்டம் அங்கீகரிக்கின்றது.

2019 ஆம் ஆண்டின் போது 29 வேலைத்தள விஜயங்களும் / குழுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. ஆண்டின் இறுதியில் 04 முன்வைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் செய்யப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழாவை CIDA ஏற்பாடு செய்ததுடன் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற விழாவில் விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன. தொழிற்துறை தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழிற் துறையில் சிறந்த பங்களிப்பை வழங்குவபர்களுக்கு இது தொடராக அங்கீகரிக்கப்பட்ட பொதுவான ஒரு நிகழ்வாகும்.

விருதிகளை வென்றோர் 2019

கட்டிட செயற்திட்டங்களிற்கான நிர்மாணத்துறை சிறப்பு விருதுகள் மற்றும் திறமை விருதுகள்

விருது வகை	செயற்திட்டம் மற்றும் விருதுபெற்றோர்	ஒப்பந்தகாரர்
சிறப்பு	மொரட்டுவ, தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை இடமாற்றம் செய்து மேம்படுத்தும் செயற்திட்டம், தியகம, ஹோமாகம.	ஐசிசி (பிரைவட்) லிமிடட்
சிறப்பு	முன்மொழியப்பட்ட மேல் மாகாண சபைக்கான கவுன்சில் அறை உட்பட பல்மாடி அலுவலக தொகுதியின் நிர்மாணம் - டென்ஸில் கோப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல	சன்கன் கொன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவட்) லிமிடட்
சிறப்பு	.ஃ.பேர்வே எலிமன்ட் (பிரைவேட்) லிமிடெட் இற்கான முன்மொழியப்பட்ட அடுக்குமாடிக் கட்டிடம்.	மெகா என்ஜினியரிங் (பிரைவட்) லிமிடட்
சிறப்பு	முன்மொழியப்பட்ட ஆர்க்கிட் மலாபே கட்டுமானம்- அபார்ட்மென்ட் II - தலாஹேன, மலபே	ஐசிசி (பிரைவட்) லிமிடட்
சிறப்பு	முன்மொழியப்பட்ட பல் அடுக்குமாடி கலப்பு அபிவிருத்தி	துடாவ பிரதர்ஸ் (பிரைவட்) லிமிடட்
சிறப்பு	பெருங்கடல் முன்னணி கான்டோஸின் கட்டுமானம் - திருகோணமலை	ஐசிசி (பிரைவட்) லிமிடட்
சிறப்பு	முன்மொழியப்பட்ட பங்களாக்கள் SAIF பெருந்தோட்ட கட்டுமானம். – பண்டாரவல	ஐசிசி (பிரைவட்) லிமிடட்
திறமை	நகர மீளுருவாக்கம் திட்டம் - ஹேனமுல்ல, கொழும்பு 15	எக்சஸ் என்ஜினியரிங் பிஎல்சீ
திறமை	முன்மொழியப்பட்ட பல் அடுக்குமாடி கட்டிட தொகுதி .ஃ.பேர்வே ஹோல்டிங் (பிரைவேட்) லிமிடெட் - காலி	மெகா என்ஜினியரிங் (பிரைவட்) லிமிடட்
திறமை	எஸ்.எம்.ஐ யின் முன்மொழியப்பட்ட சொகுசு அபார்ட்மென்ட் தொகுதி, ஹௌசிங் டிவலப்மென்ட் (பிரைவேட்) லிமிடெட், டீல் பிளேஸ், கொழும்பு 03.	மெகா என்ஜினியரிங் (பிரைவட்) லிமிடட்
திறமை	சிவில் விமானப் போக்குவரத்துக்கு அதிகாரசபைக்காக முன்மொழியப்பட்ட தலைமை அலுவலக கட்டிடம், கட்டுநாயக்கா.	இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்
திறமை	குருநாகல், மலியதேவ பெண்கள் கல்லூரிக்காக முன்மொழியப்பட்டுள்ள ஆரம்பப் பிரிவுக்கான 03 மாடி வகுப்பு அறைக் கட்டிடம்	ஏஎம்எஸ்கே கொன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவட்) லிமிடட்

	செயற்திட்டம் மற்றும் விருதுபெற்றோர்	விருது வகை
01	**வரையறுக்கப்பட்ட துடாவ பிரதர்ஸ் (பிரைவேட்) லிமிடட்** இனால் புனரமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட RDA / DW / UVA / LBFP / 2011/730 ஆம் இலக்க பசறை - மொனராகல நெடுஞ்சாலை 0 + 000 முதல் 27 + 000 கிமீ வரை	விருது
02	57 கி.மீ கிராமப்புற சாலைகளை புனரமைத்தல் / மேம்படுத்துதல் மாத்தலே மாவட்டம் - ஒப்பந்தம் 02 **எட்வர்ட் மற்றும் கிறிஸ்டி**	விருது
03	**K D A வீரசிங்க எண்ட் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்** இனால் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட உலர் மண்டலம் நகர்ப்புற நீர் மற்றும் சுகாதார திட்டம்	விருது
04	**மெகா இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட்** இனால் M / S டேவிட் பீரிஸ் ரேசிங் என்ட் லீசர் (பிரைவேட்) லிமிடெட் இற்காக வலகம, பண்டாரகம இல் நிர்மாணிக்கப்பட்ட தற்போது இருக்கும் கார்டிங் டிராக்கிற்கான நீடிப்பு நிர்மாணம்	விருது

நிர்மாணச் செயலாற்றலுக்கான தேசிய விருதுகள் – 2019
(சிவில் பொறியியல் செயற்திட்டங்கள்)
வெற்றிபெற்றோர்

சிவில் பொறியியல் செயற்திட்டங்களுக்கான நிர்மாணச் செயலாற்றல் விருதுகள் (பூரணப்படுத்தலின் பின்னரான மதிப்பீடு)	
2019	**வகை I - பெறுமதி ரூபா 1000 மில்லியனுக்கு மேல்** **வரையறுக்கப்பட்ட துடாவ பிரதர்ஸ் (பிரைவேட்) லிமிடட்** இனால் புனரமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட RDA / DW / UVA / LBFP / 2011/730 ஆம் இலக்க பசறை - மொனராகல நெடுஞ்சாலை 0 + 000 முதல் 27 + 000 கிமீ வரை 57 கி.மீ கிராமப்புற சாலைகளை புனரமைத்தல் / மேம்படுத்துதல் மாத்தலே மாவட்டம் - ஒப்பந்தம் 02 **எட்வர்ட் மற்றும் கிறிஸ்டி** **K D A வீரசிங்க எண்ட் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்** இனால் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட உலர் மண்டலம் நகர்ப்புற நீர் மற்றும் சுகாதார திட்டம்
சிவில் பொறியியல் செயற்திட்டங்களுக்கான நிர்மாணச் செயலாற்றல் விருதுகள் (பூரணப்படுத்தலின் பின்னரான மதிப்பீடு)	
2019	**வகை II - பெறுமதி ரூபா 500 மில்லியனுக்கும் ரூபா 1000 மில்லியனுக்கும் இடைப்பட்டவை** **மெகா இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட்** இனால் M / S டேவிட் பீரிஸ் ரேசிங் என்ட் லீசர் (பிரைவேட்) லிமிடெட் இற்காக வலகம, பண்டாரகம இல் நிர்மாணிக்கப்பட்ட தற்போது இருக்கும் கார்டிங் டிராக்கிற்கான நீடிப்பு நிர்மாணம்

நிர்மாண செயலாற்றல் விருதுகள் (கட்டிட நிர்மாணம் மற்றும் சிவில் பொறியியல்) (உள்நாட்டு ஒப்பந்ததாரர்களால் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள்)	
2019	**சன்கன் ஓவர்சீஸ் (பிரைவட்) லிமிடட்** இனால் மாலைதீவில் மேற்கொள்ளப்பட்ட மாரியந்தூ மாலே ரிசோர்ட் செயற்திட்டம்

நிர்மாணச் செயலாற்றலுக்கான தேசிய விருதுகள் – 2019
பசுமை செயற்திட்டங்கள் - விருது வென்றோர்

இல.	செயற்திட்டம் மற்றும் விருதுபெற்றோர்	விருது வகை
01	**மெகா இன்ஜனியரிங் (பிரைவட்) லிமிடட்** இனால் கிளியர்பொயின்ட் ரெசிடின்சீஸ் (பிரைவட்) லிமிடட் இற்காக ராஜகிரியவில் மேற்கோள்ளப்பட்ட உத்தேச நிர்மாணம்	**சிறப்பு**

வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாள்தல்

இலங்கை கட்டிட திணைக்களம், NCASL மற்றும் CIDA ஆகிய நிறுவனங்களின் உறுப்பினர்களைக் கொண்ட பூர்வாங்க விசாரணைக் குழாமொன்று ஒப்பந்தாரர்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள்

விபரம்	2019 இன் பிணக்குகள்
CIDA இன் தகவலுக்காக மாத்திரம்	05
ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விளக்கம் கோரலும் அவர்களினால் வழங்கப்பட்ட பதில்களும் தீர்க்கப்பட்டவை	53 42
விசாரணை முடிவடையாதவை	11
மொத்தம்	111

CIDA சஞ்சிகை – 2019

2019 ஆம் ஆண்டுக்கான CIDA சஞ்சிகை நிர்மாணத்துறைக்கான தேசிய விருது வழங்கும் வைபவத்தில் 2020.02.25 அன்று வெளியிடப்பட்டது. நிர்மாண கைத்தொழிலின் தர விடயங்கள் தொடர்பான தகவலை பரப்புவதே சஞ்சிகையின் பிரதான நோக்கமாகும். நிர்மாணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு பயனுள்ள கட்டுரைகளையும் தகவல்களையும் சஞ்சிகை வழங்குகின்றது.

இது சஞ்சிகையின் 18 வது பதிப்பாகும். இந்த வருடத்திலும் பங்காளர்களினாலும் புத்திஜீவிகளினாலும் வழங்கப்பட்ட மிக உயர்ந்த ஆதரவும் அர்ப்பணிப்பும் காரணமாக ICTAD / CIDA வரலாற்றின் 11 ஆவது தடவையாகவும் சர்வதேச மத்தியஸ்த சஞ்சிகையொன்றாக அது திகழ்ந்தது.

CIDA வின் தகவல் தொழில்நுட்ப முறைமை

இணைய தளத்தில் உள்ளடக்குவதற்காக பின்வரும் முக்கிய செயற்பாடுகள் இனங்காணப்பட்டு 2019 இன் கடந்த சில மாதங்களாக அதற்கான கொள்வனவு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

1 ஆதன உருவாக்குநர் பதிவு முறைமை

2 சிசிடி புள்ளிகள் நிகழ்ச்சித்திட்ட் கட்டண அமைப்பு

3 வெளிநாட்டு ஒப்பந்தக்காரர் பதிவு முறைமை

4 நிர்மாணப் பொருட்கள் மற்றும் பாகங்களின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்கள் பதிவு முறைமை

5 தகுதி வாய்ந்த நபர்கள் பதிவு முறைமை

6 அடையாளம் காணப்பட்ட நிர்மாணப் பணிகள் தகவல் முறைமை

7 தர முகாமைத்துவ கணக்காய்வாளர்கள் பதிவு முறைமை

8 பொருள் கிரய கணிப்பீட்டு முறைமை

9 தீர்ப்பாளர்கள் பதிவு முறைமை

10 நிர்மாண இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பதிவு முறைமை

11 கட்டண நுழைவாயில் ஒருங்கிணைப்பு

12 வலைத்தள மறுசீரமைப்பு

13 ஆவண முகாமைத்துவ முறைமை

2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாடுகள்/கருத்தரங்குகள்/செயலமர்வுகள்

இவ்வாண்டில் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

1	தணிப்பு நடவடிக்கைகள் செயற்திட்டத்தினால் (ஆர்.எல்.வி.எம்.எம்.பி) மேற்கொள்ளப்பட்ட நிலச்சரிவு பாதிப்புகளைக் குறைப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்	I. ஜனவரி 18
2	நிலைபேறான பொருட்கள் மற்றும் கட்டுமான நுட்பங்கள்	II. ஜனவரி 25
3	தீ விதிமுறைகள் குறித்த விழிப்புணர்வு	III. பெப்ரவரி 13
4	கட்டுமான தளங்களில் பாதுகாப்பு	IV. மார்ச் 29
5	குடியிருப்பு மற்றும் வணிக கட்டிடங்களில் எல்பிஜி கணினி நிறுவல்கள்	V. ஜூன் 27
6	மின்வலு பாதுகாப்பு மற்றும் எரிசக்தி முகாமைத்துவ தெரிவுகள்	VI. ஜூலை 25

நிர்மாணக் கைத்தொழில் தொடர்பிலான தகவலைப் பரப்புவதும் மற்றும் வருமான தோற்றுவிப்பை அதிகரிப்பதும் இந்த கருத்தரங்குகளை / செயலமர்வுகளை நடத்துவதன் நோக்கமாக உள்ளது

மின் எந்திரவியல் சேவைகள் பிரிவு

நிர்மாண சாதனங்கள் செயற்படுத்துனர் பயிற்சி நிலையம் (OTC)

அறிமுகம்

நிர்மாண சாதனங்கள் உபகரண செயற்படுத்துநர் பயிற்சி நிலையமானது, கிராலர் டிராக்டர்கள், ஏற்றிகள், அகழ்வு உபகரணங்கள், மோட்டார் கிரேடர்கள் போன்ற நிர்மாண உபகரணங்கள் குறித்த பாதுகாப்பு, அடிப்படை பராமரிப்பு மற்றும் இயக்க உத்திகள் குறித்த சிறப்பு பயிற்சிகளை வழங்குகின்றது. OTC 61 நிர்மாண உபகரணங்கள் மற்றும் போதுமான எண்ணிக்கையிலான பயிற்சி அதிகாரிகள் மற்றும் செயற்படுத்துநர்களைக் கொண்டுள்ளது.

பயிற்சியாளர்களுக்கு போதியளவு திறன்களைக் வழங்கும் நோக்கில் செயன்முறைப் பயிற்சிக்காக சுமார் 70% பயிற்சி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது, மீதமுள்ள 30% கோட்பாட்டு ரீதியான பயிற்சிக்காக மட்டுமே உள்ளது. பயிற்சியாளர்களுக்கு செயன்முறைப் பயிற்சி அளிக்கும் அதேவேளை வருமானத்தை ஈட்டுவதற்காக சில நிர்மாண உபகரணங்கள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

OTC பயிற்சித் திட்டங்கள் மேலே குறிப்பிட்டுள்ளபடி நிறுவனப் பயிற்சியையும், நடைபெற்றுவரும் நிர்மாண செயற்திட்டங்களின் செயன்முறைப் பயிற்சியையும் கொண்டிருக்கும். நிறுவன பயிற்சி முடிந்ததும் குறைந்தது மூன்று மாதங்கள் வேலைவாய்ப்புப் பெறும் ஒரு பயிற்சியாளர் NVQ க்கு தகுதியுடையவர் ஆகின்றார். நிர்மாண உபகரண செயற்படுத்துநர்களிற்கான NVQ பரீட்சைகளை எளிதாக்குவதற்காக செயன்முறைப் பயிற்சிகள் NAITA ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.



தூரநோக்கு:

> ‘‘நிர்மாணக் கைத்தொழில் துறைக்கு தேவையான திறமையுள்ள உழைப்பாளர் படையணி ஒன்றை கட்டி எழுப்பும் நோக்கில் நிர்மாணத்துறையுடன் தொடர்புற்ற செயற்பாட்டு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான திறனையும் அறிவையும் பகிர்ந்து கொள்வதினூடாக அளவீடு செய்ய முடியுமான நிர்மாண உற்பத்தித் திறனை அடைவதே எமது இலக்காகும்.’’

இலட்சிநோக்கு:

> ‘‘நிர்மாணக் கைத்தொழிலின் திறமைகளை பகிர்ந்தளித்தல் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் அறிவு, பராமரிப்பு மற்றும் நிர்மாண உபகரணங்களின் முகாமைத்துவத்தினூடாக திறமையுள்ள தொழிற்படையொன்றை நிர்மாணத் துறையில் உருவாக்குதல் மற்றும் அதனூடாக நிர்மணத்துறையின் பயனுறுதியை அளவிட முடியுமான ஒன்றாக மாற்றுதல்

குறிக்கோள்கள்:

- நிர்மாணத்துறை சார்ந்த இயந்திர உபகரணங்களை இயக்கும் நபருக்கு தேசிய நியமங்களிற்கு ஏற்றாற் போல் பயிற்சி அளித்தல்



- பொறிகளின் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை முகாமைத்துவ பயிற்சி நெறிகளை நடாத்துதல்

- நிர்மாணத்துறை இயந்திர சாதனங்கள் இயக்குனர்களுக்கான தேசிய தொழிற்றுறை தேர்ச்சிப் (NVQ) பரீட்சைகளை நடாத்தல்.

- நிர்மாண இயந்திரங்களை இயக்குகின்றவர்களின் திறனை அதிகரிப்பதினூடாக ஏற்புடைய பணிகளை வினைத்திறனுடனும் செயற்றிறனுடனும் நிறைவேற்ற முடியுமாதல்.

- நிர்மாணப் பணிகளுக்காக இயந்தி உபகரணங்களை வாடகைக்கு விடுதல்.

- அரசாங்க கருத்திடடங்களில் ஒரு பகுதியைப் பெற்று புதிய இயக்குனர்களுக்கு அதிக அனுபவத்தைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்.

பின்வரும் பயிற்சி நெறிகள் தற்போது இ.ச.ப.நி.(முவுஊ) இல் நடத்தப்படுகின்றன:

1. பூர்வாங்கப் பயிற்சி
   - 1.1. அடிப்படை நிர்மாணச் சாதனங்கள் பராமரிப்பு

2. பயில்திறன் அபிவிருத்தி
   - 2.1 பாரமற்ற நிர்மாணச் சாதனங்கள்
   - 2.2 தொட்டி பாரவண்டி
   - 2.3 பண்னை டிரக்டர்
   - 2.4 தன்னியக்க அதிர்வு பாதை ரோலர்

3. மணல் நகர்த்தும் சாதன அடிப்படை மட்டிசைப்புகள்
   - 3.1 நகரி டிரக்டர்
   - 3.2 சக்கரத்திலான சுமையேற்றி
   - 3.3 மோட்டார் கிரேடர்
   - 3.4 நீரியல் தோண்டி
   - 3.5 பின்வாரி ஏற்றி
   - 3.6 சக்கரத் தடை பளுவேற்றி

4. சிறப்பு சாதனங்கள்
   - 4.1 நடமாடும் கிரேன்
   - 4.2 பொறி ஏற்றி இறக்கி
   - 4.3 முள் வாரி ஏற்றி
   - 4.4 கிரேன் பாரவண்டி

5. தொழில் தேர்வுகள்
   - 5.1 NVQ தேர்வுகள

ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கை மின்சார சபையின் கோரிக்கைக்கு அமைய, அடிப்படை நிர்மாண உபகரண பராமரிப்பு மற்றும் டிரக் மௌன்டட் கிரேன் செயற்படுத்துநர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு 2019 இல் நடாத்தப்பட்டன.

OTC இல் நடத்தப்படும் அனைத்து பயிற்சி நெறிகளும் கட்டணம் வசூலிக்கும் கற்கை நெறிகளாவதுடன் அவற்றில் சிலவற்றிற்கு பாடசாலையினை விட்டு வெளியேறுபவர்கள் மற்றும் வேலையற்ற இளைஞர்களிடையே அதிக கேள்வி காணப்படுகின்றது.

6. கருத்தரங்குகள் / செயலமர்வுகள்

நிர்மாணத் துறையின் தேவைக்கேற்ப நிர்மாண உபகரண முகாமைத்துவ மற்றும் மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது திறன் தேர்வுகளை OTC நடத்துகின்றது. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர்களுக்காக சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

பயிற்சி வெளியீடு 2019

2019 ஆம் ஆண்டிற்கான இலக்கு பயிற்சிபெறுனர் வெளியீடுகள் மற்றும் ஒவ்வொரு பயிற்சித் திட்டத்துக்கான அடைவுகள் என்பன அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. (அட்டவணை 1 ஐப் பார்க்கவும்)

அட்டவணை 1: பயிற்சி வெளியீடு 2019

	பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வெளியீடு 2019	
		நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை	பங்குபற்றியோர் எண்ணிக்கை
1	**பூர்வாங்க பயிற்சி**		
	1.1 அடிப்படை நிர்மாண உபகரண பராமரிப்பு	20	405
2	**திறன் அபிவிருத்தி**		
	2.1 நிலத்தில் நகரும் உபகரணங்கள்		
	அடிப்படைகள்		
	கிராலர் டிராக்டர்	–	–
	சக்கர ஏற்றி	2	4
	மோட்டார் கிரேடர்	5	30
	ஹைட்ராலிக் அகழ்வாராய்ச்சி	7	66
	பேக்ஹோ ஏற்றி	11	121
	ஸ்கிட் ஸ்டியர் ஏற்றி	1	1
	2.2 சிறப்பு உபகரணங்கள்		
	மொபைல் கிரேன்	8	50
	பொறி டிரான்ஸ்போர்ட்டர்	4	20
	.்போர்க் லி.்ப்ட் ஆபரேட்டர்	7	25
	டிரக் மவுண்டட் கிரேன்	24	140
	ஏனையவைகள்		
	சுய இயக்க ரோலர்	2	5
	சரக்கு லாரி	3	4
	தனிப்பட்டு வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சிகள்	4	121
	மொத்தம்	98	992

பயிற்சி உட்கட்டமைப்பு அபிவிருத்தி

200 பேர்களை உள்ளடக்கும் இயலளவுடைய புதிய விரிவுரை மண்டபம் அமைத்தல்

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் வலுவூட்டலுடன் இணைந்ததாக நிர்மாணத் தொழிற்துறையில் OTC க்கு இன்னும் பரந்த பொறுப்புகள் உள்ளன. எனவே பங்குதாரர்களுக்கு மேலதகமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்காக புதிய விரிவுரை மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த நிர்மாணத்தின் இறுதியில் புதிய தங்குமிட வசதி காணப்படுவதுடன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்களிப்பதற்கான வளவாளர்களின் வசதிகளையும் OTC கொண்டிருக்கும்.

நிர்மாண உபகரணங்களை வாடகைக்கு வழங்குதல்

நிர்மாண உபகரணங்களை வாடகைக்கு வழங்குதல் என்பது செயற்படுத்துநர் பயிற்சி கல்லூரியினால் வழங்கப்படும் மேலதிக சேவையாகும். இது கல்லூரிக்கு அதிக வருமானத்தை ஈட்டித்தருகின்றது. தற்போதுள்ள இயந்திரத் தொகுதியை பயன்படுத்துவதற்காக பயிற்சிக்கே முன்னுரிமை வழங்கப்படுவதுடன் கிடைக்கும்போது பயன்படுத்தப்படாதுள்ள இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

வீரவில இல் புதிய துணை பயிற்சி வசதியினை அமைத்தல்

OTC 1982 இல் நிறுவப்பட்டதுடன் இது அனுராதபுரவின் கல்குலம இல் செயல்படுவதன் மூலம் நிர்மாணத் தொழிலுக்கு சேவையாற்றுகின்றது. தென் மாகாணத்தில் நிர்மாண பயிற்சி நெறிகளை பின்பற்றுவோர் எண்ணிக்கை குறைவாக இருப்பதைக் காணக்கூடியதாக இருந்தமையால், 2017 ஆம் ஆண்டின் இறுதியில் வீரவில இல் மூன்று இயந்திர பயிற்சி தொகுதிகளைக் கொண்ட ஒரு துணை பயிற்சி பிரிவு நிறுவப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் 23 செயற்படுத்துநர்கள் உட்பட மொத்தம் 70 நிர்மாண உபகரண செயற்படுத்துநர்கள் OTC, வீரவில இல் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்.

2019 ஆம் ஆண்டில் இயக்குநர் பயிற்சிக் கல்லூரியினால் ஈட்டப்பட்ட வருமானம்

அட்டவணை : 2

தொழில் வகுதி	**வருமானம்** **ரூபா**
பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (கல்குழம்)	14,715,500.00
(வீரவில)	239,750.00
இயந்திரங்கள் வாடகை	5,951,000.00
NVQ தேர்வுகள	28,750.00
தனிப்பட்ட வடிவமைப்புகக்கள	695,000.00
இயக்குநர் அடையாள அட்டைகள	296,250.00
நூனாவிதமானவை	
மொத்தம்	**21,926,250.00**

நிருமாண இயந்திசாதனப் பராமரிப்பு பயிற்சி நிலையம்

CIDA வின் நிர்மாண இயந்திரசாதனப் பராமரிப்பு பயிற்சி நிலையத்தின் பொறிமுறை பயிற்சி அலகானது (CETRAC) பத்தரமுல்ல, பெலவத்த, டி.பி.விஜேசிங்க மாவத்தையில் 17 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. நவீன நிருமாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு மீது ஏதாவது பயிற்சி பாடநெறியை நடத்துவதற்கான முழு வசதிகளையும் CETRAC கொண்டுள்ளது. கருத்திட்ட மற்றும் பராமரிப்பு முகாமையாளர்கள், இயந்திய பொறியியலாளர்கள், தொழிற்சாலை மேற்பார்வையாளர்கள், சிரேஷ்ட இயந்திரவியலாளர்கள், இயந்திர உதவியாளர்கள் மற்றும் பாடசாலை விலகியோர் ஆகியோருக்கான பயிற்சி நெறிகளும் CETRAC நிறுவனத்தில் நடத்தப்படுகின்றன.



❖ **CETRAC இன் பயிற்சித் திட்டங்கள்**

1996 ஒக்டோபர் மாதத்திலிருந்து 2001 செப்டம்பர் மாதம் வரையிலான தொழில்நுட்ப ஒத்துழைப்புக் கருத்திட்ட காலத்தின் போது ஜப்பானிய நிபுணர்களின் உதவியுடன் CETRAC இன் பயிற்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பொறிமுறையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் எந்திரவியலாளர்கள் ஆகியோருக்கு நிர்மாண இயந்திர சாதனங்களின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியை CETRAC வழங்குகின்றது. CIDA வினால் கட்டிட சேவை பொறியியல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் CETRAC இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **நிர்மாணக் கைத்தொழிலுக்கு புதிதாகச் சேர்ந்தவர்களுக்கான பயிற்சி நெறிகள்**

இளைஞர்களின் தொழிலின்மை பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவுவதற்காக பாடசாலைகளை விட்டு முன்கூட்டியே விலகுபவர்களுக்கு அதிகளவு தொழில்முன்னிலைப் பயிற்சி நெறிகளை விருத்தி செய்வதற்கும் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் பின்வரும் பாடநெறிகள் நடத்தப்பட்டன.

- **நிர்மாண உபகரணங்கள் இயந்திரவியல் பாடநெறி**

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையுடனான (NAITA) கூட்டு முயற்சியுடன் நிர்மாண உபகரணங்கள் இயந்திரவியல் பாடநெறி நடத்தப்படுகிறது. இது இரண்டு வருட பயிற்சிப் பாடநெறி என்பதுடன் CETRAC இல் 12 மாதங்களைக் கொண்ட நிறுவனரீதியான பயிற்சியையும் தொழில் நிலையங்களில் 12 மாதங்களைக் கொண்ட செயல்முறைப் பயிற்சியையும் உள்ளடக்கியுள்ளது. இப்பயிற்சி நெறியை க.பொ.த. (சா/த) பரீட்சையுடன் பாடசாலையை விட்டு வெளியேறுவோர் பின்பற்றுவதற்கு தகுதிபெற்றவர்களாவர். வருடமொன்று 120 பயிற்சியாளர்கள் உள்வாங்கப்படுகின்றனர்

இலவச தங்குமிடவசதி, பாடநெறிச் சாதனங்கள், வேலைத்தள வசதிகள், சீருடைகள், பாதுகாப்புக் கருவிகள் ஆகியன பயிற்சிக் காலத்தின் போது அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த சகல முன்னாள் பயிற்சியாளர்களும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயனுள்ள வகையில் தொழிலாற்றுகின்றார்கள். இவர்களில் சிலர் நிர்மாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல்களுக்கும் பராமரிப்புக்கும் தமது சொந்த வேலைத்தளங்களைத் தாபித்துள்ளார்கள்.

இந்தப் பயிற்சிநெறியை வெற்றிகரமாக பூர்த்திசெய்வோருக்கு NVQ மட்டம் 4 சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

- **உழியர்களின் திறன்களை தரமுயர்த்துவதற்கான மேலதிகப் பயிற்சி நெறிகள்**

நிர்மாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றில் சம்பந்தப்பட்டுள்ள பொறிமுறையாளர்களினதும் மேற்பார்வையாளர்களினதும் மற்றும் காமையாளர்களினதும் தொழில்நுட்ப அறிவைப் புதுப்பிப்பதற்காக மேலதிக பயிற்சி நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்துவதற்காக பயிற்சியாளரின் உள்ளெடுப்பு 12 பேருக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவதற்கு சம்பந்தப்பட்ட துறைகளில் போதியளவு அனுபவம் அவசியமாகும்.

- **கணிஷ்ட இயந்திர திருத்துனர்களுக்கான பயிற்சித் திட்டம்**

நிர்மாணச் சாதன பழுதுபார்த்தல் நிறுவனங்களில் தொழில்புரியும் கனிஷ்ட பொறிமுறையாளர்களின் அறிவையும் பயில்திறன்களையும் புதுப்பிப்பதற்காக இப்பயிற்சி நெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கு இரண்டிலிருந்து ஐந்து வருடங்கள் வரையிலான அனுபவம் அவசியமாகும். தமது ஊழியர்களின் பயிற்சித் தேவைகளைப் பொறுத்து ஏதாவது தெரிவு செய்யப்பட்ட பயிற்சிநெறிகளுக்கு தொழில்வழங்குனர்கள் அவர்களை அனுப்புவதற்காக இப்பயிற்சி பல பயிற்சி நெறிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. நீரியல் மற்றும் பொறிநுட்பவியல் போன்ற துறைகள் நிர்மாணக் கைத்தொழிலில் உயர்ந்த கிராக்கியைக் கொண்டுள்ளதுடன் சிலவேளை இத்துறைகள் மீது மேலதிக பாடநெறிகள் நடத்தப்படல் வேண்டும்.

- **சிரேஷ்ட இயந்திர திருத்துனர்களுக்கான பயிற்சித் திட்டம்**

சிரேஷ்ட இயந்திர திருத்துனர்களின் தொழில்நுட்ப அறிவையும் பயில்திறனையும் புதுப்பிப்பதற்காகவும் தவறுகளை கண்டறிவதிலும் சீரமைத்தலிலும் அவர்களைப் பயிற்றுவிப்பதற்காகவும் இந்த உயர் மட்ட பயிற்சிப் பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள பொறிமுறையாளர்கள் இப்பயிற்சி நெறியில் பங்கெடுப்பதற்கு தகுதியைக் கொண்டுள்ளார்கள். தமது பொறிமுறையாளர்களின் பயிற்சித் தேவைகளைப் பொறுத்து, ஏதாவது தெரிவு செய்யப்பட்ட பயிற்சி நெறிக்கு தொழில் வழங்குனர்கள் அவர்களை அனுப்புவதற்காக இப்பயிற்சி நெறி 6 வேறுபட்ட துறைகளைக் கொண்டுள்ளது. நீரியல்கள், மற்றும் இயக்கத்திரனியல் போன்ற இந்த துறைகள் நிர்மாணக் கைத்தொழிலில் மிகவும் உயர்வான கிராக்கியைக் கொண்டுள்ளன. எனவே, சிலவேளைகளில் இத் துறைகளில் மேலதிக பாடநெறிகள் நடத்தப்படவேண்டியுள்ளன.





- **மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சித் திட்டம்**

நிர்மாணச் சாதனங்களின் பராமரிப்பில் சம்பந்தப்பட்டுள்ள வேலைத்தள மேற்பார்வையாளர்களின் அறிவை உயர்த்துவதற்காக மேற்பார்வை பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ள மேற்பார்வையாளர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

- **பொறியியலாளர்கள் / முகாமையாளர்களுக்கான பயிற்சிப் பாடநெறிகள்**

நிர்மாண இயந்திர சாதனங்களின் பயன்படுத்தலிலும் பராமரிப்பிலும் சம்பந்தப்பட்டுள்ள பொறியியலாளர்கள், வேலைத்தள முகாமையாளர்கள் மற்றும் கருத்திட்ட முகாமையாளர்கள் ஆகியோரின் அறிவை மேம்படுத்துவதற்காக இப்பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நிர்மாண இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள சிவில் பொறியியலாளர்களுக்கும், கருத்திட்ட முகாமையாளர்களுக்கும் தொழில்நுட்ப அறிவை நிருமாண இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தல் தொடர்பான பயிற்சி நெறி வழங்குகின்றது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ள பொறியியலாளர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

நிர்மாண இயந்திர சாதனங்களைப் பராமரித்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள மின் எந்திரவியல் பொறியியலாளர்களுக்கும், முதல் வரிசை முகாமையாளர்களுக்கும் நிர்மாணச் சாதனங்களின் பராமரிப்பு மீதான பயிற்சி நெறி தொழில்நுட்ப அறிவை வழங்குகின்றது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ளவர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.





- **உதவிப் பதவியணியினருக்கான பயிற்சித் திட்டங்கள்**

வழமையாக நிர்மாணக் கைத்தொழிலுக்காகப் பணியாற்றும் பெருமளவு களஞ்சிய/விநியோக/கருத்திட்டப் பணியணியினர் தமது சம்பந்தப்பட்ட துறைகளில் முறைமையான பயிற்சியை மேற்கொள்வதற்கு வாய்ப்புக்கள் கிட்டுவதில்லை. இது பலதரப்பட்ட தொழிற்பாட்டுப் பிரச்சினைகளுக்கு இட்டுச் சென்று இயந்திர சாதனப் பழுதுபார்த்தல் நிறுவனங்களின் தடையற்ற தொழிற்பாடுகளுக்கு ஊறு விளைவிக்கின்றன. இப்பயிற்சி தேவையைச் சமாளிப்பதற்கு இந்த பயிற்சித் திட்டம் விருத்தி செய்யப்பட்டது.

- **கட்டிடச் சேவைகள் பொறியியல் பயிற்சித் திட்டங்கள்**

கட்டிடச் சேவைகள் பொறியியல் துறையில் ஈடுபட்டுள்ள பொறியலாளர்களுக்கும் கட்டிடக் கலைஞர்களுக்கும் பெருமளவு திட்டங்களை CETRAC நடத்தியது.

வர்த்தகக் கட்டிடங்களைப் பராமரிப்பதற்கு அவசியமான இந்த கட்டிட சேவைகளை உள்ளடக்குவதற்காக ஒரு சில பயிற்சி நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. தீ பாதுகாப்பு முறைமைகள், மின்சார முறைமைகள், காற்றுச்சீராக்கல், காற்றோட்ட முறைமைகள், நீர் விநியோக, வடிகாலமைப்பு முறைமைகள் என்பனவே அவையாகும்.

- **தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள்**

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது முகவர் நிலையத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அவை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கப்படும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு முகவர் நிலையத்திக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் முகவர் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் காண்புகள், உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பிரதான பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைத் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு அதிகாரசபை முறையான நிதி அறிக்கைகளை பேணியிருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடக்கூடியனவாகும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

பின்பற்றப்பட்ட நடைமுறைகள், பெறப்பட்ட சான்றுகள் மற்றும் பொருண்மையான விடயங்களின் வரையறைகளிற்கு உட்பட்டு, பின்வரும் கூற்றுக்களை தெரிவிக்கக் கூடிய அளவிற்கு வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், அதிகாரசபையின் ஆளுகைச் சபையிலுள்ள உறுப்பினர்களில் எவரேனுமொருவருக்கு சபையுடன் தொடர்புடைய ஏதேனும் ஒப்பந்தம் ஒன்றுடன் நேரடியான அல்லது மறைமுகமான விதத்தில் சாதாரண வணிக நிலைமையிலிருந்து விலகியதான தொடர்பு காணப்பட்டது என்றும்,

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து, ஏதேனும் எழுத்துருவிலான சட்டம் அல்லது அதிகாரசபையின் ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளிற்கு இணக்கமற்ற விதத்தில் செற்பட்டிருந்தது என்றும்.

சட்டங்கள், விதிகள் / பிரமாணங்களிற்கான தொடர்பு	விபரம்
(அ) 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிரு த்திச் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவு	ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை யேனும் தேசிய ஆலோசனை பேரவைக் கூட்டத்தை நடாத்துவதற்குப் பதிலாக மீளாய்வாண்டில் இரண்டு கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. அதேவேளை முன்னைய ஆண்டில் ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்	
- நிதிப் பிரமாணங்கள் 102, 103, 104, 105 மற்றும் 110	கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது 07 வாகனங்கள் 10 சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் அவ் வாகனங்களை திருத்துவதற்காக ரூபா 241,597 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவற்றில் 03 வாகனங்கள் 2020

	யூன் 30 ஆந் திகதி வரையிலும் திருத்தப்பட்டி ருக்காததுடன் பல்வேறு காரணங்களால் பயன்படுத்தாது வைக்கப்பட்டுள்ளன. எனினும் காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் நட்டத்தின் அளவு மற்றும் காரணங்களை மதிப்பீடு செய்வதற்கும் பொறுப்புக்களை தீர்மானிப்பதற்கும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த வாகன விபத்துக்களுக்கான ஆரம்ப அறிக்கையும் இறுதி அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
- 2015 யூலை 14 இன் 03/2015 ஆம் இலக்க அரசு நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்டவாறு நிதிப் பிரமாணம் 371	(i) ஒவ்வொரு விடயத்திலும் ஆகக்கூடியது ரூபா 100,000 வரை செயல்நிமித்த உப கட்டுநிதியை கணக்கீட்டு உத்தியோகத்தர் அங்கீகரிக்கலாம். எனினும் ரூபா 1,115,000 கூட்டுமொத்தமான செயல்நிமித்த முற்பணங்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் 11 சந்தர்ப்பங்களில் ஒரு பதவி நிலைத்தர உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்டிருந்தது.
	(ii) செயல்நிமித்தக் கட்டு நிதிகள் அவை வழங்க ப்பட்ட நோக்கம் பூர்த்தியடைந்ததும் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். எனினும் மேற்படி கட்டுநிதிகள் 07 நாட்கள் தொடக்கம் 34 நாட்கள் வரையான காலவீச்சிலான தாமதத்தின் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. அக்கட்டுநிதிகளில் ரூபா 320,045 தொகை அல்லது ஏறத்தாழ 28 சதவீதம் உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தப் படாமல் காசு மூலம் தீர்ப்பனவு செய்யப்பட்டி ருந்தன. ஆகையால் முற்பணங்களை வழங்கு வதற்கு முன்னர் முறையான மதிப்பீடு மேற்கொ ள்ளப்படாததன் காரணமாக அதன் உத்தியோ கத்தர்களால் அரச நிதி முறையற்றவாறு பயன் படுத்துவதற்கான வாய்ப்பை அதிகாரசபை வழங் கியிருந்தமை கணக்காய்வின் போது அவதானி க்கப்பட்டது.
	(iii) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 7,830,458 தொகையான பயிற்சி முற்பணங்கள் 2019 டிசம்பர் 31 வரை கூட தீர்க்கப்பட்டிருக்கவில்லை.
- நிதிப் பிரமாணம் 756, 757, 758 மற்றும் 759	(i) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 148,359,110 பெறுமதியான இருப்புக்களின் பௌதீக கிடைப்பனவை உறுதிப்படுத்துவதற்காக மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் பௌதீக இருப்புக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட மையை அவதானிக்க முடிந்திருக்கவில்லை.
	(ii) வேண்டப்பட்டவாறு மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வுச் சபை நடாத்தப்பட் டிருக்கவில்லை.

(இ) 2004 யூலை 29 ஆந் திகதிய பிஈடி 25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது ரூபா 151,857,303 தொகை (2018 இல் ரூபா 150,707,803) அழைப்பு வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் போன்ற குறுங்கால முதலீட்டு மூலங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.
(ஈ) நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல் தொடர்பான 2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முய ற்சிகள் சுற்றறிக்கை	
(i) 4.2.5 ஆம் பந்தி	மெதுவாக நகர்கின்ற மற் றும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இருப்புக்கள் மீதான காலப் பகுப்பாய்வு மாதாந்த அடிப்படையில் பணிப்பாளர் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை.
(ii) 5.1.3 ஆம் பந்தி	பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் கோரப்பட்டவாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(உ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை	சகல வாகனங்களிற்குமான எரிபொருள் பரிசோதனை ஒவ்வொரு ஆறு மாதங்களிற்கும் ஒரு முறை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இருப்பினும், அதிகாரசபைக்குச் சொந்தமான 46 வாகனங்களில் 29 வாகனங்களிற்காக இந்த நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 13,620,951 எரிபொருள் நுகர்வின் சரியான மற்றும் நம்பகத் தன்மையினை உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், பின்வருனவற்றைத் தவிர்த்து முகவர் நிலையத்தின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு அமைய செயற்பட்டிருக்கவில்லை என்றும்,

  (அ) 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்திலுள்ள 13(ஒள), (க), (கீ) மற்றும் (கு) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதன அபிவிருத்தியாளர்களை பதிவு செய்தலும் நிதி மற்றும் சந்தைப்படுத்தல் திறன்களின் கீழ் அவர்களை தரப்படுத்துதலும், இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளால் தீர்மானிக்கப்படக்கூடிய நிர்மாணத் தொழிற்துறையில் பயன்படுத்தப்படும் கட்டுமானப் பொருட்கள் மற்றும் கட்டுமானக் பகுதிகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குசர்களின் தரவுத்தளத்தை பராமரித்தல் மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளால் தீர்மானிக்கப்படக்கூடிய நிர்மாண வர்த்தகங்களில் ஈடுபட்டு ள்ள தொழிற் திறன் கொண்ட தொழிலாளர்களை பதிவுசெய்து அவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குதல் ஆகிய செயற்பாடுகளை அதிகாரசபை நிறைவேற்றியிருக்கவில்லை.

(ஆ) அவ்வாறே, சட்டத்தின் 19(1) ஆம் பிரிவின் படி, நிர்மாணத் தொழில் அபிவிருத்தி நிதியத்தை நிறுவுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், பின்வருவனவற்றைத் தவிர்த்து சபையின் வளங்கள் காலப்பகுதியினுள் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் ஏற்புடையற்பாலான சட்டதிட்டங்களுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்றும்,

  - பதிவுசெய்யப்பட்ட திறன் கொண்ட நிர்மாண கைவினைஞர்களுக்கு கைவினைஞர் அடையாள அட்டைகளை வழங்குவதற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ஐ.சி.டி.ஏ) உடன் 2019 ஜூலை 24, அன்று புரிந்துணர்வு உடன்படிக்கை யொன்றில் அதிகாரசபை கையெழுத்திட்டதுடன் செயற்திட்டக்கூறின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 56.74 மில்லியன் ஆகும். அதில் ரூபா 11.35 மில்லியன் தொகை 2019 ஆகஸ்ட் 13 அன்று ஐ.சி.டி.ஏ-க்கு வேலை ஆரம்பித்தல் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், அரசாங்க பெறுகைகள் வழிகாட்டுதலின் 5.4.4 வழிகாட்டலின் படி இதற்காக ஏற்றுக் கொள்ளத்தக்க உத்தரவாதம் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. அத்துடன், இந்த ஒப்பந்தப் பணிகளை ஐ.சி.டி.ஏ. இற்கு வழங்குவது தொடர்பான எந்தவொரு அங்கீகார மும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறாததுடன், புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரிவு 1.2 இன் படி, இந்த செயற்திட்டத்தை 2019 - 2020 காலப்ப குதியில் பூரணப்படுத்துவதற்கு இணங்கிக் கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும்கூட, இந்த அறிக்கையின் திகதி வரையிலும் எவ்வித செயன் முன்னேற்றமும் காண்பிக்கப்படாதமையால் ஐ.சி.டி.ஏ. இற்கு செலுத்திய வேலை ஆரம்பித்தல் முற்பணம் பயனற்றதாகியிருந்தது.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) ரூபா 31,142,345 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோருக்குரிய வயதுப் பகுப்பாய்வும் உறுதிப்படுத்தல்களும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. இருப்பினும், ரூபா 5,251,265 கூட்டுமொத்தமான வியாபாரக் கடன்கொடுத்தோர் மற்றும் சில்லறைக் கடன்கொடுத்தோர் என்பன 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 ஆண்டுகளிற்கும் மேல் நிலுவையாக காணப் பட்டதுடன் இந்த மீதிகள் 2020 யூன் 30 ஆந் திகதியிலுள்ளவாறும் தீர்க்கப்படாது எவ்வித மாற்றமுமின்றிக் காணப்பட்டது.

(ஆ) ரூபா 19,510,624 கூட்டுத் தொகையான கடன்பட்டோர் மீதிகளிலிருந்து எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்ட ரூபா 10,467,054 தொகைக்குரிய 37 கடன்பட்டோரிமிருந்து மீதி உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருந்தன. இருப்பினும், 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு கடன்பட்டோரும் தனக்குரிய மீதியை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. ஆகையால், நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கடன்பட்டோர் மீதிகளின் அறவிடக்கூடிய தன்மை கணக்காய்வில் ஐயத்திற்கிடமானதாக உள்ளது.

(இ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வயதுப் பகுப்பாய்வின் படி, 2020 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 8,371,180 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகள் மூன்று ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாது காணப்பட்டது. அதில் ரூபா 7,598,264 தொகை ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அதிகாரசபையின் ஆளுகையின் கீழுள்ள வீடமைப்புத் திட்டமிடல் மற்றும் கட்டிட நிலையத்தில் (சி.எச்.பி.பி) காணப்படுகின்ற பயன்படுத்தப்படாதுள்ள கட்டிடங்களின் பெரும்பகுதி, கடந்த பல வருடங்களாக பல்வேறு தரப்பினருக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இருப்பினும், 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ரூபா 361,245 வாடகை வருமானம் இரண்டு தரப்பினரிடமிருந்தும் 2020

ஜூன் 30 வரையிலும் வசூலிக்கப்படாமல் நிலுவையில் இருந்தது. மேலும், 2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி வரை 04 கட்சிகளுக்கு இடையில் கையெழுத்திடப்பட்ட வாடகை உடன்படிக்கைகளை புதுப்பிக்க அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) நிர்மாண கைத்தொழிற் துறையை மேம்படுத்துவதற்காக அதிகாரசபை வெளியிட்டுள்ள அனைத்து வெளியீடுகளும் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப 09 முதல் 32 ஆண்டுகள் வரையான காலத்திற்கும் மேலாக திருத்தப்பட்டோ அல்லது புதுப்பிக்கப்பட்டோ இருக்கவில்லை. எனவே, (அ) நிர்மாணத் தொழிற் துறையில் நியமங்களை வகுத்தல் (ஆ) நிர்மாணத் தொழிலுடன் தொடர்புடைய ஒழுக்க நெறிகள், வழிமுறைகள், நடைமுறைகள் மற்றும் செயல்முறை மற்றும் நிர்மாணத் தொழில் தொடர்பான ஆவணங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துதல் மற்றும் (இ) நிர்மாணத் துறையின் நிலைபேறான வளர்ச்சி, சீர்திருத்தம் மற்றும் மேம்பாடு போன்றவற்றைத் தூண்டுவதற்காக நிர்மாணத் துறையின் பங்குதாரர்களிற்கு தந்துரோபாய தலைமையை வழங்குதல் போன்ற நோக்கங்களை அடைதல் என்பன கணக்காய்வில் கேள்விக்குரியாக காணப்பட்டது.

.

(ஊ) "ஷில்பா சவிய" பயிற்சி திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களிடையே விநியோகிப்பதற்காக 2016 முதல் 2018 வரையிலான காலகட்டத்தில் ரூபா 155,684,319 பெறுமதியான புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள், சீருடைகள் மற்றும் கருவித்தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், இது தொடர்பாக 2019 டிசம்பர் 16 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையில், அந்தப் பொருட்களில், ரூபா 10,924,385 பெறுமதியானவை பயிற்சி பெறுனர்களிற்கு பகிர்ந்தளிக்கப்படாது அதிகாரசபைக்கு சொந்தமான நிர்மாண உபகரணங்கள் பயிற்சி நிலையத்தின் (செட்ராக்) இரண்டு அறைகளில் 2020 ஜூன் 30 வரை வைக்கப்பட்டிருந்தன.

(எ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் பல்வேறு நோக்கங்களுக்காக பொது திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட மூலதன மானியங்களில் ரூபா 252,539,098 தொகை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் அதிகாரசபையின் வங்கி நடப்புக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக, மீளாய்வாண்டில் சுமார் ரூபா 25 மில்லியன் தொகையான நட்டம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. மேற்கூறியவற்றைத் தவிர, 2020 டிசம்பர் 01 திகதியிட்ட வரிசை அமைச்சின் கடிதத்தின் மூலம் 2020 ஜனவரி 01 ஆம் திகதி ரூபா 14,612,249 மூலதன கட்டுநிதி வரிசை அமைச்சிடமிருந்து கிடைத்திருந்தது. இருப்பினும், இது 2020 ஆம் ஆண்டிற்காக பெறப்பட்ட கட்டுநிதியாகக் கருதப்பட்டிருந்ததுடன் 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ஒரு வங்கிக் கணக்கில் செயலற்ற நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

.

(ஏ) அதிகாரசபையின் மூன்று வங்கி நடைமுறைக் கணக்குகளுடன் தொடர்புடைய வங்கிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் உழைக்கப்பட்ட வருமானங்கள் மற்றும் திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்த மானியங்களை பயன்படுத்தியிருக்காமை காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த வங்கி நடைமுறைக் கணக்குகளில் ரூபா 361.33 மில்லியன் தொகை (2018 இல் ரூபா 329.94 மில்லியன்) பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தது. அதேவேளை, அத்திகதியில் உள்ளவாறான காசுப் புத்தகத்தின் படியான மீதி ரூபா 355.33 மில்லியன் (2018 இல் ரூபா 301.61 மில்லியன்) ஆகும். மேலும், ரூபா 300 மில்லியன் தொகையான சராசரிக் காசு மீதி (2018 இல் ரூபா 213 மில்லியன்) அவ்வங்கி நடைமுறைக் கணக்குகளில் எந்தவொரு நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படாமல் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு முழுவதும் விளைவற்றிருந்தன. அத்துடன், 2020 யூன் 30 இல் உள்ளவாறு அந்நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் ரூபா 394.28 மில்லியன் வரை அதிகரித்துக் காணப்பட்டது.

(ஐ) சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கும் அதிகாரசபைக்கும் இடையில் 2018 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஜி.சி.சி நாடுகளில் இலங்கைத் தொழிலாளர்களிற்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்காக அவர்களின் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்திற்காக ரூபா 10,169,300 இற்கு மேற்படாத

மானியத்தை வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,590,900 மற்றும் ரூபா 7,098,422 தொகைகள் முறையே 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்டிருந்தன. இருப்பினும், ரூபா 3,151,369 தொகை மாத்திரமே செலவிடப்பட்டதுடன், மீதமுள்ள ரூபா 6,537,953 தொகை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் அதிகாரசபையின் வருமானமாக கருதப்பட்டிருந்தது. மேலும், இந்த மானியத்தின் கீழ் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்ட விவரங்கள் இந்த அறிக்கையின் திகதி வரை கூட கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஒ) அதிகாரசபையில் இந்த நோக்கத்திற்காக போதுமான நிதி ஏற்பாடுகள் கிடைப்பதைக் கருத்தில் கொள்ளாமல் அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில் முன்னைய ஆண்டில் தன்னார்வ ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடையினை செலுத்துவதற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து ரூபா 9,276,587 பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இதன் விளைவாக, பொது திறைசேரியடமிருந்து பெறப்பட்ட முழுத் தொகையும் வருமானமாகக் கருதப்பட்டு, இந்த அறிக்கையின் திகதி வரையிலும் அதிகாரசபையின் வங்கி நடப்புக் கணக்கில் எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) வருடாந்த பாதீட்டு ஒதுக்கீட்டின் மூலம் தேவையான நிதி வழங்கப்படும் என்பதற்கு உட்பட்டு நிதிக் குத்தகை அடிப்படையில் 03 புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக தேசிய பாதீட்டுத் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து ரூபா 8,729,172 (மூலதனப் பகுதியாக ரூபா 5,068,537 தொகையும் வட்டிப் பகுதியாக ரூபா 3,660,635 தொகையும்) தொகை இலங்கை வங்கிக்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், பொது திறைசேரியிடமிருந்து 2020 ஜூன் 30 வரையிலும் அவர்கள் ஒப்புக்கொண்ட படி எந்த நிதியும் பெறப்பட்டிருக்கவில்லை. அத்துடன், மேலே உள்ள 03 புதிய வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக தற்போதுள்ள 03 வாகனங்களை கைதவிர்ப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. இருப்பினும், 2015 ஜூலை 10 திகதியிட்ட 02/15 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக அதில் 02 வாகனங்கள் மாத்திரம் ரூபா 5,773,000 இற்கு கைதவிர்க்கப்பட்டிருந்ததுடன் 2018 ஜூலை 16 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் படி இந்த தொகையை பொது திறைசேரிக்கு அனுப்பி வைக்காது அதிகாரசபை தன்வசம் வைத்துள்ளது.

(ஔ) கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் படி, 2003 ஜூன் 02 ஆந் திகதிய PED / 12 ஆம் இலக்க நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக அதிகாரசபையின் ஒரு ஊழியர் 2015 பெப்ரவரி 09 முதல் அப்போதைய வரிசை அமைச்சிற்கு (வீடமைப்பு மற்றும் சமூர்தி அமைச்சு) விடுவிக்கப்பட்டிருந்தார்/ இணைக்கப்பட்டிருந்தார். 2015 முதல் பெப்ரவரி 09 முதல் 2019 டிசம்பர் 31 வரையிலான காலப் பகுதியில் இந்த உத்தியோகத்தருக்கு சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகாக சுமார் ரூபா 4,117,355 செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2020 ஜூன் 30 வரை வரிசை அமைச்சிலிருந்து எந்த நிதியும் திருப்பிச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

4.0 செயலாற்றல் குறிகாட்டிகள்

4.1

	குறித்துரைத்த குறிகாட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக உண்மையான வெளியீடு		
		100%- 90%	75%-89%	50%-74%
	CIDA பதிவு மற்றும் பங்குதாரர்களின் தரப்படுத்தலின் செயல்பாடுகள்	>100		
	தேசிய கட்டுமான சிறப்பு மற்றும் செயல்திறன் விருதுகளை முன்னேற்றத்துடன் நடத்துதல்.		83	
	தகுதியான நபர்களின் பட்டியல். (உறுப்பினர் அல்லா தகுதி வாய்ந்த நபர்களின் எண்ணிக்கை)			<50
	4.1 பங்குதாரர்களுக்கான கருத்தரங்குகள் ∴ பட்டறைகளை நடத்துதல்.			<50
	4.2 - பதிவு செய்வதற்கான CCD புள்ளிகளைக் கருத்தில் கொள்ளுதல். (களின் எண்ணிக்கை:: பெறப்பட்ட CCD)			<50
	CIDA ஜர்னல்	>100		
	தொழில்நுட்ப கணக்காய்வு			<50
	தீர்ப்பாளர் சேவை		78	
	விழிப்புணர்வு நிகழ்ச்சி			<50
	தொழில்துறை சேவை பிரிவின் ஆலோசனை சேவையை வழங்குதல்	>100		
	திட்ட முகாமைத்துவ சேவைகள;/ஆலோசனை			<50
	வெளியீடு		78	
	கட்டுமான பொருளாதாரம்	>100		
	இலங்கைக்கான தேசிய கட்டிடக் குறியீடு			<50
	செலவு தரவுத்தளம்			<50
	கட்டுமான கைவினைஞரின் பதிவு			<50
	மேற்பார்வை மற்றும் மேலாண்மை பணியாளர்களின் பதிவு			<50
	சிறிய மற்றும் நடுத்தர ஒப்பந்ததாரரின் திறனை வளர்க்க பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துங்கள்			<50
	வெளியீடுகளின் விற்பனை (இலக்குகள் விற்கப்படும் வெளியீடுகளின் எண்ணிக்கையில் நிர்ணயிக்கப்படுகின்றன)			<50
	* பொது-தனியார் கூட்டு (பிபிபி) மாதிரியுடன் கட்டுமானத் துறையில் திறன் மேம்பாடு			<50
	*பதிவுசெய்யப்பட்ட திறமையான கட்டுமானக் கலைஞர்களுக்கு கைவினை அடையாள அட்டை வழங்குதல்			<50
	பயிற்சி திட்டங்கள்		79	
	கருத்தரங்குகள் ∴ பட்டறைகள்			<50
	மொத்த தனிப்பயன் வடிவமைப்பு பயிற்சி நடவடிக்கைகள்	>100		
	NVQ பயிற்சி			<50
	பிற வருமானம் (ஆடிட்டோரியம், கருத்தரங்கு அறைகள், கணினி ஆய்வகம் போன்றவை.), வசதி பணியமர்த்தல், தேர்வுக் கட்டணம், வளாக வாடகை, வெளியீடுகளின் விற்பனை, இதர வருமானம்		73	
	* மின் கற்றல் மற்றும் நேரடி ஒளிபரப்பு அலகு நிறுவுதல்.			<50

	நிர்மாண உபகரண பயிற்சி நிலையம்			
1	பயிற்சி திட்டங்கள்		79	
2	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஒப்பந்ததாரர் மேம்பாட்டு திட்டங்கள்			59
3	பட்டறை பழுதுபார்த்தல்/நடத்துதல் வர்த்தக சோதனைகள் மற்றும் ஆலோசனை சேவைகள்.'.இதர இதர பணிமனை வேலைகள் மற்றும் உபகரணங்கள் பணியமர்த்தல்	>100		
4	*கட்டுமான கருவி மெக்கானிக் படிப்பு			<50
5	வாகன பழுது			<50
6	*13 வருட உத்திரவாத கல்வி	>100		
நிர்மாண உபகரண செயற்படுத்துனர் பயிற்சி நிலையம்				
1	பயிற்சி திட்டங்கள்			65
2	இயந்திர பணியமர்த்தல்			<50
3	13 வருட உத்திரவாதக் கல்வித் திட்டம் - கட்டுமான உபகரண ஆபரேட்டர் பயிற்சி			<50
4	OTC இன் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் தொழில்நுட்பப் பயிற்சியை மேம்படுத்துதல்			<50
முனித வளம் மற்றும் நிர்வாகம்				
1	பணியமர்த்துபவர்கள் (ஆடிட்டோரியம், மாநாட்டு அறை மற்றும் கருத்தரங்கு அறைகள், சுற்றுலா விடுதிகள், CGF)		89	
2	உள்ளூர் பயிற்சி			<50
3	வெளிநாட்டு பயிற்சி			<50
4	மருத்துவ காப்புறுதி			<50
5	*தலைமை அலுவலக கட்டிடம் பராமரிப்பு மற்றும் பயிற்சி மையங்களின் மறுசீரமைப்பு			<50

5.0 மனிதவள விபரக்கோவை

5.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரித்த பதவியணி	உள்ளபடியான பதவியணி	வெற்றிடங்கள்/ (மேலதிகம்)**
சிரேஷ்ட	36	30	6
மூன்றாம் நிலை	71	48	23
இரண்டாம் நிலை	123	92	31
கனிஸ்ட	160	112	48
மொத்தம்	**390**	**282**	**108**

5.2 மனிதவளத்தின் பற்றாக்குறை அல்லது மிகையானது நிறுவனத்தின் செயலாற்றலை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை சுருக்கமாகக் கூறிப்பிடுதல்

நிறுவனத்தில் அனைத்து மட்டங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் முழுமையாக ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை. சிஐடி சட்டத்தின் உட்பிரிவுகளின்படி பணிகளை முடிப்பதற்கும் திட்டங்களைச் சாதிப்பதற்கும் அதிக நேரம் எடுத்துக் கொள்வதற்கு ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாகும். கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் தேர்தல் காலம் காரணமாக, காலியிடங்களை நிரப்ப முடியவில்லை, ஆனால் 13.08.2020 அன்று வெளியிடப்பட்ட மிகவும் அத்தியாவசியமான காலியான அஞ்சல் தாள் விளம்பரத்தை நிரப்ப முடியவில்லை. அதன்படி, ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

6.3

Capacity Development of the staff

SR NO	Name of the programme	No.of staff trained	Duration of the programme	Total Investment (RS)		Nature of the programme(Abroard/local	Output/Knowledged gained
				Local	Foreign		
01	Internal Audit Planning	2	2 Day	14,000/=		Local	Skill development
02	Construction Production	2	2 Days	free		Local	Technical Knowledge gained
03	Diploma - Software Engineering	1	1 year	75,000/=		Local	Skill development
04	Positive Attitude motivation Leadership	85	2 Days	240,000/=		Local	Skill development
05	Computer Hardware With network	1	5 Months	34,000/=		Local	Technical Knowledge development
06	Certificate couse in computer	1	6 Months	36,000/=		Local	Skill development
07	Refresher Coures	1	4 Days		293,240/=	Foreign	Skill development
08	Trainer training Programme	20	4 Days			Foreign	Skill development
09	Capacity building	1	15 Days			Foreign	Technical Knowledge gained
10	BRCA Workshop	2	2 Days			Foreign	Skill development
11	Operator Training	4	6 Days			Foreign	Skill development
12	Asia Construct	1	3 Days			Foreign	Technical Knowledge development
	Total	**121**		**399,000/=**	**293,340/=**		

6. இணங்கியொழுகுதல் அறிக்கை

இல.	பிரயோகிக்கத்தக்க தேவைப்பாடு	இணங்கியொழு குதல் நிலை (இணங்கப்பட்டமை / இணங்கப்படாமை)	இணங்கியொழு காமை விபரம்	இணங்கியொழுகாமை தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை
1	**பின்வரும் நிதிநிலை அறிக்கைகள்/கணக்குகள் உரிய தேதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1 . l	ஆண்டு நிதி அறிக்கைகள்	இணங்கியது		
1.2	பொது அதிகாரிகள் கணக்கில் முன்பணம்	இணங்கியது		
1.3	வர்த்தகம் மற்றும் உற்பத்தி முற்பண கணக்குகள் (வணிக முற்பண கணக்குகள்)	இணங்கவில்லை	அதிகாரம் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை	
1.4	களஞ்சிய முற்பண கணக்குக	இணங்கவில்லை	எங்கள் அதிகாரத்தில் கடை வைத்திருப்பது வணிகமாக கருதப்படவில்லை	
I .5	விசேட முற்பண கணக்குகள்	இணங்கியது		
1.6	மற்றவைகள்			
2	**புத்தகங்களையும் பதிவேடுகளையும் பராமரித்தல் (FR445)/**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் அடிப்படையில் நிலையான சொத்துக்கள் பதிவு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கியது		
2.2	தனிப்பட்ட ஊதியங்கள் பதிவு/ தனிப்பட்ட ஊதிய அட்டைகள் பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன	இணங்கியது		
2.3	கணக்காய்வு ஐயவினவல்களின் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கியது		
2.4	உள் கணக்காய்வு அறிக்கைகளின் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கியது		
2.5	அனைத்து மாதாந்திர கணக்கு சுருக்கங்கள் (CIGAS) தயாரிக்கப்பட்டு, உரிய தேதியில் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படுதல்	இணங்கவில்லை	பொது நிறுவனம் மற்றும் சட்டப்பூர்வ வாரியங்கள் (CIGAS) திட்டத்தின் மூலம் செயல்பட அறிவுறுத்தப்படவில்லை	PED 19 இன் படி நிர்வாகக் குழுவிடம் மாதாந்திர கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன
2.6	காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டன	இணங்கியது		
2.7	இருப்புப் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கியது		
2.8	களஞ்சியப் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கியது		
2.9	இழப்புகள் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கியது		
2.10	கடப்பாட்டு பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கியது		
2.11	அடியிதழ் புத்தகங்களின் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது (GA - N20)	இணங்கியது		
3	நிதி கட்டுப்பாடு (FR 135) க்கான செயல்பாடுகளின் பகிர்ந்தளித்தல்			
3.1	நிறுவனத்திற்குள் நிதி அதிகாரம் பிரித்து ஒப்படைக்கப்பட்டது	இணங்கியது		
3.2	நிதி அதிகாரத்தின் குறித்து நிறுவனத்திற்குள் தெரிவிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		

இல.	பிரயோகிக்கத்தக்க தேவைப்பாடு	இணங்கியொழு குதல் நிலை (இணங்கப்பட்டமை / இணங்கப்படாமை)	இணங்கியொழு காமை விபரம்	இணங்கியொழுகாமை தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் மூலம் செயற்படுத்தும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு, கட்டுப்பாடுகள் கடைபிடிக்கப்பட்டுள்ளன	இணங்கியது		
3.4	11.05.2014 தேதியிட்ட அரச கணக்குச் சுற்றறிக்கை 171/2004 இன் அடிப்படையில் கணக்காளர்கள் அரசாங்க ஊதியப் பட்டியல் மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்துகின்றனர்.	இணங்கியது		
4	**வருடாந்திர திட்டங்களை தயாரித்தல்**			
4.1	ஆண்டு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
4.2	ஆண்டு கொள்முதல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
4.3	ஆண்டு உள் தணிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
4.4	ஆண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுஇ உரிய தேதியில் டீனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
4.5	ஆண்டு பணப்புழக்கம் இரண்டுஇ கருவூல செயல்பாட்டுத் துறைக்கு சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
5	**தணிக்கை வினவல்கள்**			
5.1	க்கான செயல்பாடுகளின் பிரதிநிதித்துவம்	இணங்கியது		
6	**நிதி கட்டுப்பாடு (குசு 135)**			
6. 1	நிதி ஆணையம் இருந்துள்ளது	இணங்கியது		
6.2	நிறுவனத்திற்குள் ஒப்படைக்கப்பட்டது	இணங்கவில்லை	உரிய தகவல்களை சேகரிக்கும் பணியில் தாமதம் ஏற்பட்டதால்	பதிலுக்கான தகவல்களைச் சேகரிக்க நேரம் எடுத்தால்; இடைக்கால பதில் அனுப்பப்படும்
6.3	நிதி அதிகாரத்தின் பிரதிநிதிகள்	இணங்கியது		
6.4	நிறுவனத்திற்குள் தெரிவிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
7	**அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது**			
7.1	ஒவ்வொரு பரிவர்த்தனையையும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் மூலம் அனுப்பும் வகையில்	இணங்கியது		
8	**அதிகாரிகள்**			
8.1	கட்டுப்பாடுகள் கடைபிடிக்கப்பட்டுள்ளன	இணங்கியது		
8.2	11.05.2014 தேதியிட்ட மாநிலக் கணக்குச் சுற்றறிக்கை 171.∴2004 இன் அடிப்படையில் கணக்காளர்கள் அரசாங்க ஊதியப் பட்டியல் மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்துகின்றனர்.	இணங்கியது		
	வருடாந்திர திட்டங்களை தயாரித்தல்	இணங்கியது		

இல.	பிரயோகிக்கத்தக்க தேவைப்பாடு	இணங்கியொழு குதல் நிலை (இணங்கப்பட்டமை / இணங்கப்படாமை)	இணங்கியொழு காமை விபரம்	இணங்கியொழுகாமை தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை
8.3	ஆண்டு செயல் திட்டம் உள்ளது	இணங்கியது		
8.4	தயார் செய்யப்பட்டது	இணங்கியது		
8.5	ஆண்டு கொள்முதல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
9	**ஆண்டு உள் தணிக்கை திட்டம் உள்ளது**			
9.1	தயார் செய்யப்பட்டது	இணங்கியது		
9.2	ஆண்டு மதிப்பீடு உள்ளது	இணங்கவில்லை	கால அவகாசம் இல்லாதது	எதிர்காலத்தில் உரிய நேரத்தில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்
9.3	உரிய தேதியில் டீனுயை தயாரித்து சமர்பித்தார்	இணங்கியது		
9.4	ஆண்டு பணப்புழக்கம் இரண்டு	இணங்கியது		
9.5	கருவூல செயல்பாட்டுத் துறைக்கு சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டது	இணங்கியது		
9.6	தணிக்கை வினவல்கள்	இணங்கியது		
10	**அனைத்து தணிக்கை கேள்விகளுக்கும் தணிக்கையாளர் ஜெனரலால் குறிப்பிட்ட நேரத்திற்குள் பதில் அளிக்கப்பட்டுள்ளது**			
10.1	உள்துறை தணிக்கை	இணங்கியது		
10.2	நிதி ஒழுங்குமுறை 34(.˙.)னுஆயுட209 இன் அடிப்படையில் ஆடிட்டர் ஜெனரலைக் கலந்தாலோசித்து, ஆண்டின் தொடக்கத்தில் உள் தணிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டது.	இணங்கியது		
10.3	அனைத்து உள் தணிக்கை அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
11	**அனைத்து உள் தணிக்கைகளின் நகல்கள்**			
11.1	தேசிய தணிக்கைச் சட்டத்தின் துணைப்பிரிவு 40(4) இன் அடிப்படையில் மேலாண்மை தணிக்கைத் துறைக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2018 இன் 19	இணங்கியது		
11.2	நிதி ஒழுங்குமுறை 134(3) இன் அடிப்படையில் உள் தணிக்கை அறிக்கைகளின் அனைத்து நகல்களும் ஆடிட்டர் ஜெனரலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணங்கியது		
12	**தணிக்கை மற்றும் மேலாண்மை**			
12.1	குழு	இணங்கியது		
12.2	னுஆயு சுற்றறிக்கை 1-2019 இன் படி, தணிக்கை மற்றும் மேலாண்மைக் குழுவின் குறைந்தபட்சம் 04 கூட்டங்கள் இந்த ஆண்டில் நடத்தப்பட்டுள்ளன.	இணங்கியது		
12.3	சொத்து மேலாண்மை	இணங்கியது		
13	**சொத்து மேலாண்மைச் சுற்றறிக்கை எண். 01.˙.2017ன் பத்தி 07ன் படி, சொத்துக்கள் வாங்குதல் மற்றும் அகற்றல் பற்றிய தகவல்கள், கட்டுப்பாட்டாளர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.**			

இல.	பிரயோகிக்கத்தக்க தேவைப்பாடு	இணங்கியொழு குதல் நிலை (இணங்கப்பட்டமை / இணங்கப்படாமை)	இணங்கியொழு காமை விபரம்	இணங்கியொழுகாமை தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை
13.1	விதிகளை செயல்படுத்த ஒருங்கிணைக்க பொருத்தமான தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டார்	இணங்கியது		
13.2	மேற்கூறிய சுற்றறிக்கையின் 13வது பத்தியின்படி சுற்றறிக்கை மற்றும் நியமனம் செய்யப்பட்ட அதிகாரியின் விவரங்கள் கன்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது.	இணங்கியது		
14	**கணக்கெடுப்பு வாரியங்கள் நடத்தப்பட்டன**			
14.1	மற்றும் பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05.்.2016இன் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்திடம் உரிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டது.	இணங்கியது		
14.2	கணக்கெடுப்பு வாரியம் மற்றும் பிற தொடர்புடைய பரிந்துரைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட அதிகப்படியான மற்றும் பற்றாக்குறைகள், சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.	இணங்கவில்லை	ஒரு மாதத்திற்கும் மேலாக இந்த முன்பணம் உள்ளது	அதிகாரசபையின் சுற்றறிக்கையின்படி, உயர்நிலை தீர்க்கப்படும் வரை சம்பளம் நிறுத்தப்படும்
14.3	கண்டனக் கட்டுரைகளை அகற்றுவது இருந்தது	இணங்கியது		
14.4	குசு 772 இன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது	இணங்கவில்லை	அரச கூட்டுத்தாபனங்களும் சட்ட சபைகளும் கருவூலக் கணக்குகளைப் பராமரிப்பதில்லை	PED 19 இன் படி மாதாந்திர கணக்கு அறிக்கையை அதிகார மேலாண்மை வாரியத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்
15	**வாகன மேலாண்மை**			
15.1	தினசரி இயங்கும் விளக்கப்படங்கள் மற்றும் மாதாந்திர	இணங்கியது		
15.2	பூல் வாகனங்களின் சுருக்கங்கள் தயாரிக்கப்பட்டு உரிய தேதியில் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன	இணங்கியது		
15.3	கண்டனம் செய்யப்பட்ட வாகனங்கள் இருந்தன	இணங்கவில்லை	மாநில நிறுவனங்கள் மற்றும் சட்டப்பூர்வ வாரியம் அவ்வாறு செய்ய அறிவுறுத்தப்படவில்லை	தணிக்கை மேலாண்மை குழு மற்றும் அதிகார சபை நிர்வாகத்திற்கு பற்றாக்குறை வருவாய் அறிக்கைகளை சமர்ப்பித்தல்
16	குறைவான காலத்திற்குள் அகற்றப்படும்			
16.1	கண்டித்து 6 மாதங்களுக்கு பிறகு	இணங்கியது		
16.2	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டன	இணங்கியது		
l6.3	விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
17	எ.்.ப்.ஆர். ஒவ்வொரு வாகன விபத்துக்கும் 103, 104, 109 மற்றும் 110			
17.1	வாகனங்களின் எரிபொருள் நுகர்வு உள்ளது	இணங்கியது		
17.2	பத்தி 3.1 இன் விதிகளின் அடிப்படையில் மீண்டும் சோதிக்கப்பட்டது	இணங்கியது		
17.3	29.12.2016 இன் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 30.்.2016	இணங்கியது		
18	குத்தகைக்கு விடப்பட்டவரின் முழுமையான உரிமை			
18.1	குத்தகை காலத்திற்குப் பிறகு வாகன பதிவு புத்தகங்கள் மாற்றப்பட்டுள்ளன	இணங்கியது		
18.2	வங்கி கணக்குகளின் மேலாண்மை	இணங்கியது		
19	வங்கி சமரச அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, சான்றளிக்கப்பட்டு, உரிய தேதிக்குள் தணிக்கைக்குத் தயாராகிவிட்டன.			

இல.	பிரயோகிக்கத்தக்க தேவைப்பாடு	இணங்கியொழு குதல் நிலை (இணங்கப்பட்டமை / இணங்கப்படாமை)	இணங்கியொழு காமை விபரம்	இணங்கியொழுகாமை தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை
19.1	இருந்த செயலற்ற கணக்குகள்	இணங்கியது		
19.2	மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அல்லது முந்தைய ஆண்டுகளில் இருந்து தீர்வு காணப்பட்டது	இணங்கியது		
19.3	வங்கி நல்லிணக்க அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட நிலுவைகள் தொடர்பான நிதி ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது மற்றும் எதற்காக சரிசெய்தல் செய்யப்பட வேண்டும் மற்றும் அந்த நிலுவைகள் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட வேண்டும்.	இணங்கியது		
19.4	விதிகளின் பயன்பாடு	இணங்கியது		
20	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் வரம்பை மீறாமல் செலவிடப்பட்டன			
20.1	குசு 94(ஐ) இன் படி ஆண்டின் இறுதியில் எஞ்சியிருக்கும் விதிகளை மீறாத பொறுப்புகள்	இணங்கியது		